WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

AKARAM

# அகரம்

14. புரட்டாசி - 13. ஐப்பசி 2012

சுவடி: 1.05 திருவள்ளுவர் ஆண்டு 2043 நந்தன வருடம்



மக்கள் அனைவரும்
விடுதலைக்காக,
விடுதலை என்பது
மக்களுக்காக!

## விக்கி லீக்ஸ்
## ஜூலியன் அசான்ஜ்
## வில்லனா விவேகியா?

FREE
Magazine

FREE CIRCULATION:
GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

WHOLESALE GROßHANDEL

# transfood

Maliban, MD, Elephant House, Asia King ஆகிய நிறுவனங்களின் முகவரும், தரம்வாய்ந்த ஆசிய, ஆபிரிக்க மரக்கறி மற்றும் உலர்உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து யேர்மனி, டென்மார்க், கிரீஸ், மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விநியோகம் செய்யும் ஏக விநியோகஸ்தர்கள்.




Friendliness - Service
& more Brands
Under one supplier




தமிழ் மக்களின் பெருவிருப்புக்குரிய உணவுத் தயாரிப்பு நிறுவனங்களான

TRS - NIRU - DOUBLE HORSE - HEERA - TILDA
LAILA - MTR - SCHREZADE SURYA- KINGS - PG
RUBBICCON - PATTAKS - MAGGI - PRESIDENT

ஆகியனவற்றின் விநியோகஸ்தர்கள்.




**யேர்மனியில் 6 மொத்த மற்றும் சில்லறை வியாபார நிலையங்களைக் கொண்ட அங்காடி!**

*அகரம் இதழை மாதம் தோறும் இலவசமாக உங்கள் வியாபார நிலையங்களுக்கு பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் எமக்கு அழையுங்கள்!*




TRANSFOOD WHOLESALE (GROßHANDEL)

**MÜNDELHEIMER WEG 35,**
**40472 DÜSSELDORF**
transfoodlager@yahoo.de

**TEL: 0049 (0) 211 4371890**
**FAX: 0049 (0) 211 43718929**

# எவரும் முயற்சிக்கலாம்

## 5.9% இலிருந்து KREDIT

**KOMMISSION** கட்டத்தேவையில்லை

வேலைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது

இலவச சேவை

## BITTE...... BITTE....

## BITTE.....BITTE.....BITTE.....

## BITTE.....

நாம் அனுப்பும் விளம்பரக் கடிதங்களுக்குள் சிறிய புத்தகத்தை வெளிநாட்டிலிருந்து வரும் உங்கள் உறவுகளிற்க்கு **SWISS VISA** எடுப்பதற்கான மருத்துவக்காப்புறுதியை செய்ய உபயோகிக்கவும்.

தேவைப்படாத பட்சத்தில் தயவுசெய்து எறிந்து விடாமல் நண்பர்களிற்கோ உறவினர்களிற்கோ கொடுத்து உதவவும்.

தொடர்புகளிற்கு


# SHELVAZUG

**KREDIT & VERSICHERUNG & IMMOBILIEN**

SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ

**TEL** 041 790 64 63 **FAX** 041 790 64 68 **NAT** 079 514 64 28

www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch



# அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

14. புரட்டாசி - 13. ஐப்பசி
சுவடி 1.05

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)

தொடர்புகளுக்கு:
tMedia Network
P.O. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: *editor@akaram.eu*

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.

# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

அப்பாடா! திரு.சுமந்திரன் அவர்கள் கூறியது போன்று கடவுளின் கொடையாக கிடைத்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலானது, நல்ல படியாக நடந்து முடிவுகள் வெளியாகியும் விட்டன. தேர்தலில் அரசு தரப்பு வென்று விட்டால் அது நடத்திய போரும் அதன் இப்போதைய செயற்பாடும் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டுவிட்டது என அரசு வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்து விடும். எனவே த.தே.கூ. வெற்றி பெற்றால் மட்டுமே தமிழரின் தாயகம் காப்பாற்றப்படும் என்றார்கள். அதற்காகவே தாம் போட்டியிடுவதாகவும் கூறினர்.

இப்பொழுது தேர்தல் முடிவுகள் அரசின் வெற்றியாகவே வந்துள்ளன. ஆளும் கட்சி நல்வாய்ப்பு ஆசனங்கள் 2ம் உட்பட 14 ஆசனங்களைப் பெற்றுள்ளது. த.தே.கூ. 11 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளமையானது கிழக்கு மாகாண மக்கள் அரசின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுவிட்டனர் என்ற தோற்றப் பாட்டை வலுப்படுத்தும் என்பதே உண்மை.

முஸ்லீம்களோடு நல்ல இணக்கப்பாட்டையும் உறவையும் தமிழர் தரப்பு வலுப்படுத்தத் தவறியதின் விளைவே இது. குறைந்த பட்சம் தேர்தல் உடன்பாட்டைச் செய்திருந்தாலாவது 18 ஆசனங்களோடு மேலதிக ஆசனம் 2யும் பெற்று வலுவான ஆட்சியை பெற்றிருக்க முடியும். முஸ்லீம் காங்கிரஸ் தனது 7 ஆசனங்களுடன் ஆட்சி அமைக்கும் என்பதை உறுதிபடக் கூறலாம்.

இப்போதுள்ள ஒற்றையாட்சி அரசமைப்பு முறையில் உண்மையான ஜனநாயகம் சாத்தியப்படாது என்பதில் தமிழ் மக்களைப் போன்றே அகரமும் நம்புகிறது. எனவே இந்த தேர்தலை நாம் விரும்பவில்லை அதில் த.தே.கூ. போட்டியிட்டதை நாம் ஆதரிக்கவும் இல்லை. ஆனால் அவர்களுக்குப் பட்டறிவும் படிப்பறிவும் நிறையவே உண்டு.

ஒரு சுத்திகரிப்பு ஊழியரைக் கூட சுயாதீனமாக நியமனம் செய்ய அதிகாரம் இல்லாத மாகாண சபையை வைத்து இரு மாகாணங்களை ஒட்ட வைத்து விடலாம் என்றார்கள். அரசின் பிரச்சாரத்தை முறித்து விடலாம் என்றும் கூறினார்கள். இனி என்ன சொல்லப் போகிறார்கள்?

இதுவரை இவர்களின் அரசியல் இலங்கையில் ஈழத் தமிழரின் துயரைத் துடைக்கவோ, புலத்தில் அகதிகளான தமிழரை இந்தியா உட்பட உலக நாடுகள் பந்தாடும் இழி நிலைக்குத் தீர்வு காணவோ, எதுவும் செய்தது கிடையாது. இன்னமும் வெளிநாட்டுக்குத் தப்பிப் போகும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கடலிலும் சிறைகளிலும் பலியாகிச் சாகின்றனர்.

இந்திய அகதி முகாம்களிலும் சிறப்பு முகாம்களிலும் சித்திரவதைபடும் எவரது துயரும் இவர்கள் கவனத்தில் படுவதில்லை. அன்றாடம் துயர் தாளாது தூக்கில் உயிரை மாய்க்கும் அவலம் எங்கும் நடக்கிறது. மக்களோடு ஒட்டாமலும் குடிசார் அமைப்புகளின் கருத்துகளை மதிக்காமலும் இவர்கள் செய்யும் அரசியலில் மக்கள் நம்பிக்கை இழந்து வாக்களிக்கவே மறுக்கிறார்கள்.

மறுபுறத்தில் சிங்களம் தனது போராட்டத்தை எமது வீடுகளுக்குள் கொண்டுவந்து விட்டது. அதன் உளவாளிகளாகப் பலர் புலத்தில் தமிழர் பலருடைய குடும்ப நண்பர்களாகப் பழகி வருகிறார்கள். ஊரிலே சிங்கள வேலையாட்கள் தமிழர் வீடுகளில் விரும்பி வரவேற்கப்படும் அளவுக்கு சுமூக நிலை நிலவுகிறது எனச் செய்திகள் எமக்குக் கிடைக்கின்றன.

அங்கேயும் சரி புலத்திலும் சரி நாம் சிங்களத்தின் வலைக்குள் முழுமையாகச் சிக்கிக் கொண்டு விட்டோம். இதனை எவரும் நம்பவும் தயாராக இல்லை. இப்படி எழுதும் எம்மைத்தான் துரோகிகள் எனக் கூறுவர். அந்தக் கட்சி இந்தக் கட்சி அந்தக் குழு இந்தக் குழு அந்த ஊர் இந்த ஊர் என வேறுபடுத்திப் பார்த்தே பழகிப் போன எமக்கு தமிழன் என்ற முக்கியமான அடையாளம் மட்டும் தெரியாமல் கிடக்கிறது.

இந்த அடையாளத்தை வைத்தே சிங்களம் மலையகத் தமிழின், இஸ்லாமியத் தமிழன், கிருஸ்தவன் இந்து என அனைவரையும் ஒன்றாகத் தீர்த்துக் கட்டி வெற்றி காண்கிறது. ஆனால் அழிந்து கொண்டிருக்கும் போதும் எம்மால் இந்த வேறுபாடுகளைக் கடந்து செயற்பட முடியவில்லை.

இந்த இதழில் வாசகர் பக்கம் சேர்க்கப் படுகிறது. சென்ற இதழில் அகரம் வாசகர் இல்லம் உறுப்பினர் படிவங்களை வெளியிட்டிருந்தோம். நாம் கட்சி அரசியல் அல்லது குழு வேற்றுமைகளை வளர்த்து செயற்படப் போவதில்லை. ஒரே ஒரு தகுதியும் அடையாளமும் தமிழன் என்ற ஒன்றே. சாதி மத பேதம் அற்ற தமிழனை உலகில் வலம் வரச் செய்வதே எமது இலட்சியம்.

வாசகர் வதிபும் வட்டாரம் சார்ந்த அமைப்பாக அகரம் இல்லம் செயற்படும். முற்றிலும் ஜனநாயக விதிகளுக்கு அமைவாக வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு எமது அடுத்த தலை முறையாவது தமிழ் ஈழ விடுதலையை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது ஆசை.

அதற்கான நாற்று மேடைகளாக அகரம் வாசகர் இல்லங்கள் விளங்க வேண்டும். எமது தேசியத் தலைவர் கனவு கண்ட இளம் தலைமுறையை உருவாக்க அணி திரளுங்கள். தலைமை தாங்கப் போவது அகரம் அல்ல. வாசகராகிய நீங்களே.

இணையத்திலும் அகரம் இதழைப் படிப்போரின் தொகையின் வளர்ச்சி கண்டு பூரிப்பு அடைகிறோம். எமது மகிழ்ச்சியில் வாசகராகிய நீங்களும் விளம்பரம் தருகின்ற வணிகப் பெருமக்களும் பெருமை கொள்ளலாம். ஆனாலும் எமது சுமைகள் குறையவில்லை.

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
அகரம் குழுமம்!...



# வாசகர் இல்லம்!

## விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்: ______________________

______________________

முகவரி: ______________________

______________________

நாடு: ______________________

தொலைபேசி: ______________________

மின்னஞ்சல்: ______________________

______________________

திகதி - கையொப்பம்:

**அகரம் வாசகர் இல்லத்தில் இணைந்து மாதாந்த இதழை நேரடியாக உங்கள் வீட்டிற்கே பெற்றுக்கொள்ளுங்கள்!****

**அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:**

AKARAM
PO. BOX 4153 - 59037 Hamm
Germany

**தொடர்புகளுக்கு:**

0049 2381 98 77 897

** இல்லத்திற்கே அனுப்பிவைக்க தபால்த்தலைக்கான கட்டணம்: 25€/வருடம்

# விக்கி லீக்ஸ் ஜூலியன் அசான்ஜ் வில்லனா விவேகியா?




ஈழம் தமிழரான எமக்கும் எங்கோ இருக்கும் ஜூலியன் போல் அசான்ஜ் என்ற பெண்களைக் கற்பழித்த குற்றச் சாட்டை எதிர்நோக்கும் மனிதனுடன் என்ன ஒட்டு உறவு வேண்டிக் கிடக்கிறது என வாசகர் கேட்கலாம். தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் இலங்கை அரசு கொன்றொழிக்கப் பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டு எப்படிப் பயன் படுத்தப் பட்டதோ அது போன்ற ஒன்றுதான் 36 வயதான அவுஸ்திரேலியாவில் பிறந்த இந்த மனிதனுக்கு ஏற்பட்டுள்ள நிலையும்.



*ஈக்குவடோரின் ஜனாதிபதி ரபேல் கொரேயா.*

ஈக்குவடோரின் ஜனாதிபதி ரபேல் கொரேயா பிரித்தானியாவில் தமது நாட்டுத் தூதரகத்தில் அடைக்கலம் பெற்றுத் தங்கி உள்ள அசான்ஜ்சே பாதுகாப்பாக வெளியேற வழி விட வேண்டும் எனக் கேட்கிறார். நாடுகள் விக்கி லீக்சையும் அசான்ஜ்யையும் இரட்டை நிலைப்பாடுகளால் நசுக்க நினைக்கின்றன. எனவே சுவீடன் நாட்டுக்கு விசாரணைக்காக அசான்ஜ் ஒப்புதல் கொடுக்க முன்னர் அவரை 3வது நாட்டுக்கு நாடு கடத்துவது இல்லை என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் ஈக்குவடோர் அதிபர் கூறுகிறார்.

இந்த அளவுக்கு இன்று உலகின் கவனத்தைத் தன் பால் இழுத்துள்ளதோடு பிரித்தானிய அமெரிக்க அரசு களுக்குப் பெரும் இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தும் இவன் ஊடகச் சுதந்திரத்தின் அடையாளமாகத் திகழுகிறான். ரஷிய அதிபர் புட்டினே ஆதரவு வழங்கும் அளவுக்கு உயர்ந்துள்ளான். காரணம் அவன் நடத்தும் விக்கி லீக்ஸ் அம்பலப்படுத்தி வரும் அமெரிக்க இராணுவம் ஈராக் போரில் நடத்திய கொடுமைகளும் அவற்றின் சூத்திரதாரிகளும் பற்றிய இரகசிய ஆவணங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களே.

அமெரிக்க இராணுவ இரகசியங்களும் இராஜதந்திர ஆவணங்களும் அம்பலமாகி வருவதால் வெகுண்டு நிற்கும் அமெரிக்க அரசு அதிகார வர்க்கம் அமெரிக்க அரசின் இரகசியங்களைத் திருடி அம்பலப்படுத்துவது இராஜத் துரோகம் அவனைப் பிடித்துத் தூக்கில் போட வேண்டும் எனத் துடிக்கிறது. ஆனால் அவனின் தாயோ அவன் சிறுவனாக இருந்த பொழுதே மற்றவர்களின் துயரத்தைத் புரிந்து கொள்ளப் பழக்கப் பட்டவன். மற்றவர்களுக்குப் பொய் பேசுவதில்லை. தெருவில் குடிபோதையில் யாரைப் பார்த்தாலும் அன்போடும் அனுதாபத்தோடும் அணுகப் பழக்கப் பட்டவன். அவன் எவரோடாவது தகராறு செய்தால் அவனை நாம் எமது மகன் என்பதற்காக ஒருபோதும் நியாயப்படுத்தியது இல்லை என்கிறார்.

ஆனால் அமெரிக்க அரசுக்கோ அவனை எப்படியும் தன்னோடு எடுத்து மரணக் கட்டிலிலோ மீளாத் துயிலிலோ போட்டுவிடும் அளவுக்குத் துடிக்கிறது. அதற்கு கிடைத்துள்ள ஒரே ஒரு வாய்ப்பு சுவீடன்




த. எதிர்மன்னசிங்கம்

நாட்டுப் பெண்கள் அசான்ஜுக்கு எதிராகக் கொடுத்துள்ள இரண்டு பழைய பாலியல் பலாத்கார முறைப்பாடுகள் ஆகும். இந்த முறைப்பாடுகள் பல வருடங்களுக்கு முன்னர் தம்மோடு உறவு கொள்ள கிழிந்த ஆணுறை பயன்படுத்தினார் என்கிறது ஒன்று. மற்றதோ தனது விருப்பத்துக்கு மாறாகக் கலவி செய்தார் என்கிறது.

இவற்றைப் பாலியல் பலாத்காரம் எனக் கூற முடியாது என்ற வாதப் பிரதிவாதங்கள் பிரபலங்களால் முன்வைக்கப் பட்டு வருகின்றன. இவை தானாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் எனக் கருத முடியாது உள்ளன. இந்த முறைப்பாடுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத நிலையில் சுவீடன் நாட்டுக் காவல்துறை விசாரணை நடத்த அசான்ஜ்ஜை சுவீடனுக்கு நாடு கடத்த பிரித்தானிய அரசைக் கேட்டுள்ளது. தற்காலிகமாகப் பிரித்தானியாவில் தங்கி இருக்கும் இவரை சுவீடனுக்கு நாடு கடத்த முயன்று வருகிறது.

சுவீடனுக்கு நாடு கடத்தப்பட்டால் தன்னை அமெரிக்காவிடம் ஒப்படைத்து விடுவர் அதனால் தனக்கு உயிராபத்து எனச் செய்யப்பட்ட மேல் நீதி மன்ற மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் பிணையில் விடுதலையாகி இருந்த நிலையில் ஈக்குவடோர் அரசிடம் அரசியல் தஞ்சம் கோரி அந்நாட்டுத் தூதரகத்தில் தங்கிவருகிறார். வழக்கே தாக்கல் செய்யப்படாத பாலியல் வன்முறை குற்றச்சாட்டு காரணமாக நாடு கடத்த முனையும் இந்த நாடு களின் முயற்சி விக்கி லீக்ஸ் இணையத்துக்கும் கருத்துச் சுதந்திரத்துக்கும் விடுக்கப்படும் அச்சுறுத்தலாகப் பல அரசுகளாலும் மக்களாலும் பார்க்கப் படுகிறது. எனவேதான் பெருமளவான பிரித்தானியப் பொதுமக்கள் ஆதரவோடு அசான்ஜ் ஒரு உலக நாயகனாகக் காட்சியளிக்கிறார்.

2010ல் முதன் முதலாக விக்கி லீக்ஸ் ஊடகத்துறை ஆதரவோடு அமெரிக்க இராணுவ இரகசியங்கள் மற்றும் தூதரக ஆவணங்களை வெளியிடத் தொடங்கியதோடு உலகின் கவனம் அதன் பக்கம் திரும்பியது.

வீரபாண்டிய கட்ட பொம்மன் படத்தில் வெள்ளைக்காரனான ஜாக்சன் துரை பேசுவதாக ஒரு வசனம் வரும். "நாங்கள் ஒரு நாயைச் சுடுவதானாலும் நீதி விசாரண செய்துதான் சுடுவோம்", என்பதாக அது இருக்கும். ஆதிக்க வெறி பிடித்த ஆட்சியாளர்கள் அதைத்தான் எப்போதும் எங்கேயும் செய்து வருகிறார்கள். அதுவும் உலக வல்லரசாகத் திகழும் அமெரிக்காவின் அன்றாட செயற்பாட்டில் அல்வா சாப்பிடுவது போல் நடக்கிறது.

அமெரிக்க அரசின் அடிமையாகச் செயற்பட்டுத் தன் இன மக்களின் நலன் கருதி எதிர்க்கத் துணிந்து போராடிய ஒசாம பின் லாடன் உலகப் பயங்கரவாதி எனக் கெளரவிக்கப் பட்டான். அதே போன்ற காரணத்துக்காக அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுடனோ ஒசாமா பின் லாடன் உடனோ எதுவித தொடர்பும் இல்லாத ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹசெயின் ஆபத்தான அணு மற்றும் நச்சுவாயு ஆயுதங்களை வைத்துள்ளான் என வேட்டை ஆடப்பட்டான்.

இரு தனிப்பட்ட நபர்களும் உண்மைக் குற்றவாளிகள் என்றால் அவர்களைத் தண்டிக்கப் பல பொறிமுறைகள் உலகில் உள்ளன. உலகக் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச காவல் துறையான இன்ரபோல் உள்ளன. ஆனால் அமெரிக்காவின் தேவை அத் தனி நபர்கள் அல்ல. இந்த நாடுகளில் குவிந்து கிடக்கும் கனிமங்களும் தனது டொலர் நாணயத்துக்கு இந்த இருவராலும் ஏற்பட இருந்த ஆபத்தைப் போக்குவதுமே.

இந்த இரண்டு நிகழ்வுகளும் தமிழ் இன அழிப்பு வெறி கொண்ட சிங்களத்துக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. அதுவும் நழுவி அதன் வாயில் வடிந்தது போன்ற இந்தியாவின் ஆட்சி மாற்றம் பாரதிய ஜனதாக் கட்சியிலிருந்து சோனியாவின் காங்கிரஸின் காலடியில் விழுந்தது. அதன் வெளி உறவுக் கொள்கை திசை மாறியதால் நோர்வே அனுசரணையுடன் நடந்த அமைதிப் பேச்சும் உடைந்து போருக்கும் பேரழிவுக்கும் வழி செய்தது.

ஈராக், ஆப்கான், பாகிஸ்தான் எனத் தொடங்கிய அமெரிக்காவின் கொலை வெறி இன்று எகிப்து, லிபியா, சிரியா, பாரெயின் எனப் பாரெங்கும் பல்கிப் பரவி வருறது. எந்த நொடியில் அது ஈரானுக்குள் தலைகாட்டுமோ என்ற அச்சம் எங்கும் நிறைந்து விட்டது. இங்கெல்லாம் தலை விரித்தாடிய அமெரிக்க இராணுவ நடவடிக்கை களின் இராணுவ இரகசியங்களை இணைய வெளியில் இலவசமாகத் தலைவிரித்து ஆட வைத்து அமெரிக்காவின் ஜட்டியை உருவி வருகிறான் இந்த ஜூலியன் அசான்ஜ்.

இவனை இப்படியே விட்டு இருக்கிறதையும் இழந்து இரண்டு கையாலும் மானத்தை பிரித்தானிய அரச வாரிசு ஹரியைப் போன்று பொத்தி மூடவா முடியும்? எனவே எப்படி முன்னாள் உலக வங்கித் தலைவர் ஸ்ரோஸ்கானைப் பிரெஞ்சு அதிபர் போட்டியில் இருந்து விலக்க அவரது ஜட்டி விவகாரம் உதவியதோ அப்படியான ஒன்று இதிலும் கிடைத்துள்ளது. அவர் விடயத்தில் விடயம் சூட்டோடு சூடாக கைது செய்யப் பட்டதால் அவருக்குப் பல மில்லியன் டொலர் செலவும் பதற்றம் நிறைந்த வீட்டுக்காவல் சிறைவாசமும் கிடைத்தது. இருந்த போதிலும் அவர் போட்டியிட முடியாத நிலையிலும் சாக்கோஸியால் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை என்பது காலம் கற்பித்த பாடம்.

அமெரிக்காவின் செல்வாக்குக் காரணமாக அசான்ஜ் பிறந்த நாடான அவுஸ்திரேலியாவே அடைக்கலம் கொடுக்கத் தயாராக இல்லை. ஆனால் புட்டின் பாராட்டுத் தெரிவித்துள்ளார். பிரித்தானியா இவரை சுதந்திரமாக வெளியேறி ஈக்குவடோர் செல்ல அனுமதிக்குமா அல்லது கைது செய்து நாடுகடத்தும் முயற்சியில் பிடிவாதம் செய்து உலக அரசியலில் சிக்கலை வளர்க்குமா என்பதை காலம்தான் பதில் சொல்லும்.




உங்கள் தேவை அனைத்தும் ஒரே குடையின் கீழ்

# AKM

## Asian Supermarket

*மலிவு! மலிவு!*



**அனைத்து மீன் மரக்கறி வகைகளும்**

**தாயகத்திலிருந்து மிகத் தரமாக**

**இறக்குமதி செய்யப்பட்டவை!**







**வன்னியன் களஞ்சியம் வற்றாத பிரமாண்டம்!**





பெரும் கொள்முதலாழர்களுக்கும் வெளி மாநிலங்களில் இருந்து வருபவர்களுக்கும்
அதிசைக்கும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றன
அனுபவம் மிக்க தொழிலாளர்கள் தரம் மிக்க பொருட்கள்
அன்பான வரவேற்பு உபசரிப்பு!





***இல்லை என்று சொல்வதற்கு எதுவும் இல்லை***
***என்ற அளவிற்கு பிரமாண்டம் ஒருமுறை வாருங்கள்***
***நண்பர்களையும் கூட்டி வாருங்கள்***
***வன்னியன் களஞ்சியம் வற்றாத பிரமாண்டம் என்பதை***
***கண்டு அசந்து போவீர்கள்!***

லாபம் மட்டும் என்ற நோக்கத்தில் இயங்காமல்
மக்கள் நலனுடன் இணைந்துள்ளோம் இதுவே
**AKM** இன் வளர்ச்சிக்கு காரணம்

| Basel str 80 | Talgut-Zentrum 7 | Alpenstrasse 1 |
| --- | --- | --- |
| 6003 Luzern | 3063 Ittigen (Bern) | 3072 Ostermundigen |
| Tel. 041 2405400 | Tel.031 9222318 | (Bern NILAVANI) |
| | | Tel. 031 9312525 |

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல் - அம்பலமான தமிழரசுக் கட்சியின் அசல் முகம்?




சன் தவராஜா



மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் மூன்று மாவட்டங்களுக்குமான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவி என்ற கோசத்துடன் தேர்தலை நோக்கிய முஸ்லிம் அரசியற் கட்சிகள் ஒரு கட்டத்தில் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடிப்பதற்கான போட்டி என்ற நிலைக்குக் கீழிறங்கி, இறுதியாக முஸ்லிம் முதலைமைச்சர் என்ற கோசத்தையே கைவிட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து தேர்தலைச் சந்திப்பது என்ற விடயத்தில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அத்தகைய ஒரு தேர்தற் கூட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்தவும், அரசாங்கத்துடனான தமது பேரம்பேசும் வலுவைக் குறைக்கவுமே உதவும் என்ற காரணத்தினால் முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு முன்வரவில்லை. அது மாத்திரமன்றி, அவ்வாறு நிகழ்வதற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் துணைபோக ஆளுங்கட்சி அனுமதி வழங்கியிருக்கப் போவதுமில்லை.

உறுதியான கொள்கை, நிதானமான அரசியற் செயற்பாடுகள், தீர்க்க தரிசனத்துடன் கூடிய தலைமைத்துவம் இன்மை, கட்சிப் போராளிகளைக் கட்சியோடு கட்டிப் போடும் திறன் இல்லாமை ஆகிய விடயங்களால் நாளுக்குநாள், தேர்தலுக்குத் தேர்தல் நலிந்துவரும் முஸ்லிம் காங்கிரஸ் தற்போது தனது வலுவை மேலும் இழந்துள்ளது. இறுதி நேரத்தில், அவசர கதியில் வேட்பாளர் பட்டியலை நிறைவு செய்ய வேண்டிய இக்கட்டான சூழலில் அறிமுகமில்லாத வேட்பாளர்களைக் கூடக் களமிறக்க வேண்டிய கட்டாயத்திற்கு அக்கட்சி தள்ளப் பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதில் அங்கம் வகிக்கும் ஒருசில கட்சிகளுக்கும் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடுவது என்பது வடக்கு கிழக்கு பிரிப்பை ஏற்றுக் கொள்வதற்குச் சமனானது என்ற தத்துவார்த்த ரீதியிலான கேள்வி முன்னுள்ள போதிலும், "தகுதியற்ற நபர்கள் தெரிவு செய்யப்படுவதைத் தடுப்பது'' என்ற சமரசத்துடன் தேர்தற் களத்தில் குதித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் படிப்படியாகக் கபளீகரம் செய்யப்பட்டு வரும் நிலையில் அதனை மெய்ப்பிப்பது போன்றே வேட்பாளர் பட்டியலும் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

தமிழ் மக்களின் சமரசம் செய்ய முடியாத அரசியற் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றை முன்னிறுத்தி அரசியற்பணி செய்யவெனத் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது பழமைவாதச் சிந்தனை கொண்ட தமிழரசுக் கட்சிப் "பெருச்சாளிகளை" மீறி எதுவும் செய்துவிட முடியாத ஒரு நிலையைச் சந்தித்திருக்கின்றது.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் வேட்பாளர்களைப் பங்கிடுவதில் முரண்டு பிடித்த தமிழரசுக் கட்சித் தலைமை, தனது ஏகபோகத்தை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியமை மட்டுமன்றி தமிழர் அரசியலின் எதிர்காலச் சென்னெறியையும் கோடிகாட்டி உள்ளது.

முள்ளி வாய்க்காலின் பின்னான அரசியல் யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் எவ்வாறு சிங்கள தேசம் தவறான பாதையில் பயணித்து மென்மேலும் சிக்கல்களைச் சம்பாதித்து வருகின்றதோ, அதைப் போன்றதொரு பாணியில் யதார்த்தத்தைப் புறந்தள்ளிப் பயணிக்கவே தமிழரசுக் கட்சியின் தலைமையும் விரும்புவதைப் போன்று தெரிகின்றது. 70 களில் தமிழீழம் என்ற சொல்லை உணர்ச்சி அரசியலுக்காகப் பயன்படுத்திய மிதவாத தமிழ் அரசியற் தலைவர்கள் எவ்வாறு அந்தச் சொல்லால் உருவான சூழலுக்கு இறுதியில் விரோதிகளாக மாறி பலியாகிப் போனார்களோ, கிட்டத்தட்ட அதனைப் போன்றே 2001 இல் நிலவிய சூழலால் உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற மந்திரச் சொல்லைப் பயன்படுத்தி ஏணியில் ஏறிவிட்டு இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாத புதிய சூழலில்; தமது பழைய புத்தியைக் காட்டி வருகின்றனர்.

இதில் வியப்பான விடயம் என்னவென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாகப் புதிதாக அரசியலுக்கு அறிமுகமான கொள்கைப் "பிடிப்பாளர்கள்" எனக் கருதப்பட்டவர்கள் கூட பழைய பாணியில் புளித்துப் போன கதைகளைப் பேசி வருகின்றமையே.

சிறி லங்காவின் இன்றைய அரசியற் சூழலைப் பொறுத்தவரை புலம்பெயர் தமிழர்களே பாரிய அழுக்கக் குழுவாக விளங்கி வருகின்றனர். புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளே, விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியிற் தோற்கடித்த சூழலில் தமிழர்களை ஒட்டுமொத்தமாக வென்று விட்டதாகக் கருதி மனம்போன போக்கிற் செயற்படாமல் சிங்களத்தைத் தடுத்து வருகின்றது. அதனால், புலம்பெயர் தமிழர்களை அவர்களுக்குப் பிடிக்காமற் போய் விட்டது.

துரதிர்ஷ்டவசமாக தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கும் புலம்பெயர் தமிழர்களைப் பிடிக்காமற் போய் விட்டமைதான் விந்தையானது. கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது புலம்பெயர் தமிழர்களோடு அரசியல் ரீதியிலான தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் கவனமாகத் தவிர்க்கப்பட்டதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈழத் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் அவலமான முறையில் முடிவிற்கு வந்த பிற்பாடு, மூச்சு விடுவதற்குக் கூட முடியாமல், உண்பதற்கும் கொட்டாவி விடுவதற்கும் மாத்திரமே வாயைத் திறந்து கொண்டிருந்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சுதந்திரமாக வாய் திறக்கக் காரணமாக அமைந்ததே புலம்பெயர் தமிழர்களின் அரசியற் செயற்பாடுகள்தான் என்பதை அவர்கள் இலகுவாக மறந்து விட்டார்கள் என்பதுதான் இதில் முரண்நகையான விடயம்.

புலம்பெயர் தமிழர்களின் அபிலாஷைகளைப் புறந்தள்ளி வைத்துவிட்டு சிங்களத் தலைமைகளாலேயோ, தமிழரசுக் கட்சித் தலைமையினாலேயோ சிறி லங்காவில் நிம்மதியாக அரசியல் நடத்த முடியாது என்ற யதார்த்தத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். புலம்பெயர் தமிழர்களால் சிங்கள அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியிலான அழுத்தத்தை வழங்க முடியுமென்றால் தமிழ்த் தலைமைகளுக்கு பொருளாதார ரீதியாக அந்த அழுத்தத்தை வழங்க முடியும். ஏனெனில், தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கியில் கணிசமான பிரிவினர் புலம்பெயர் தமிழர்களின் நிதியிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர்.

அது மாத்திரமன்றி, ஈழத் தமிழ் மக்களுக்கு அரசியற் தலைமைத்துவத்தை வழங்குவது என்பது புலம்பெயர் தமிழர்களையும் உள்ளடக்கியதே. ஈழத் தமிழர்களில் மூன்றில் ஒரு வீதமானோர் புலம்பெயர்ந்த நாடுகளிலேயே வாழுகின்றனர். அது மாத்திரமன்றி கடந்த காலங்களில் தமிழ் மக்களின் தலைமை அரசியற் சக்தியாக விளங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் புலம்பெயர் தமிழர்களுக்கும் சேர்த்தே அரசியற் தலைமைத்துவத்தை வழங்கினார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி புலம்பெயர் தமிழர்களையும் உள்ளடக்கியே அரசியல் செய்ய விரும்புகின்றது என்றால் அதற்கான தெளிவான கொள்கைகளை வரையறை செய்வதுடன், முறையான பொறிமுறைகளையும் கொண்டிருக்க வேண்டும். மாறாக, புலம்பெயர் தமிழர்களைப் புறந்தள்ளியே அரசியல் நடாத்த விரும்பினால் அதனையும் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். அவ்வாறு வெளிப்படையாகக் கூறுவது புலம்பெயர் தமிழர்கள் தமது நலன்களை, அபிலாஷைகளை நிறைவு செய்யக் கூடிய, தமக்கான ஒரு அரசியற் சக்தியை சிறி லங்காவில் தெரிவு செய்து கொள்வதற்கு உதவக் கூடும்.

முள்ளிவாய்க்காலின் பின்னான சூழலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழர் அரசியலில் ஒரு முக்கியமான வகிபாகம் வாய்த்திருப்பதை நாம் மறுத்து விடுவதற்கில்லை. அதன் அர்த்தம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்திக் கொண்டு தமிழரசுக் கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவற்றையும் விமர்சனங்கள் எதுவுமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல. தாயகத்தில் வாழும் மக்களைப் பொறுத்தவரை மாற்றுத் தெரிவுகள் இல்லாத நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் பெரும்பாலான மக்கள் அணி திரள்கிறார்கள் என்பதே உண்மை. இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் கூடத் தனது நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து நிற்கின்றது என்ற யதார்த்தம் விடுதலைப் புலிகள் காலத்தில் உலக நாடுகள் கூட்டமைப்புத் தொடர்பில் கொண்டிருந்த கண்ணோட்டத்தை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் புரியும்.

உண்மையிலேயே இன்று உள்நாட்டிலும் சரி புலம்பெயர் நாடுகளிலும் சரி, ஈழத் தமிழ் மக்கள் முறையான அரசியற் தலைமைத்துவம் இன்றியே இருந்து வருகின்றார்கள். அந்த இடைவெளியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறைவு செய்யுமாக இருந்தால் வரவேற்கப் படக் கூடியதே. ஆனால், அதற்கான எந்தவொரு சமிக்ஞைகளையும் தமிழரசுக் கட்சியின் அண்மைக் கால நடவடிக்கைகள் வெளிப்படுத்தாமல் உள்ளமையே வேதனையாக உள்ளது.

'கையிருக்கும் பணத்தில் கடலளவு பொருட்கள்'

Dortmund மாநகரில் கடலுணவு வகைகளின் மலிவு விற்பனை அங்காடி




KAILAS
FISCH - FEINKOST

ஆசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்வகைகள், இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன், நண்டு, இறால், கணவாய் வகைகள் உடன் மீன் மற்றும் கருவாடு வகைகள் உடன் ஆட்டிறைச்சி, உடன் மரக்கறிவகைகள், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தரம்வாய்ந்த அரிசிவகைகள், உங்கள் வீட்டிற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் அனைத்தும் மலிவுவிலையில்!

Adler Str. 5
44137 Dortmund

Tel: 0231 137 433 95
www.kailas-fisch.de


www.niorra.de
Textiles & Jewellery
. சாறிகள்
. பஞ்சாபிகள்
. பாவாடைத்தாவணிகள்
. பட்டுவேட்டிகள்
. இமிரேசன் நகைகள்
. ரெடிமெட் ஆடைகள்
30.10.2012 வரை
கோடைகால
அதிரடி மலிவுவிற்ப்பனை !
NIORRA
Kaiserstr. 62-64, 60329 Frankfurt
Kaiserpassage Laden Nr. : 27
Tel.: 069 2713 3944



# வீதிக்கு இறங்குவோமா?

ஆர்.பாவலன்

ஈழத்தமிழர் பிரச்சினைக்காக புலம்பெயர் தேசங்களில் பரவலாக எழுப்பப்பட்டு வந்த குரல்கள் படிப்படியாக ஓய்ந்து போகத் தொடங்கியுள்ளதாக தெரிகின்றது. ஒட்டுமொத்தமாக அனைவரும் ஒன்று திரண்டு நின்ற சூழல் இப்போது இல்லாமல் போகத்தொடங்கியுள்ளது. வழமைபோலவே எங்கும் பிளவுகள், பிரிவுகள் முளைவிடத்தொடங்கியுள்ளன. ஏட்டிக்குப்போட்டியாக எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவும் ஆட்சேர்க்கவும் பலரும் களமிறங்கிவிட்டனர். தனி நபர்களது எதிர்ப்புப்போராட்டங்களே இப்போது எஞ்சியுள்ளது.

யுத்தத்தின் பின்னராகக் கூட வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் பிரச்சினைகள் எல்லையற்று குவிந்தேயிருக்கின்றன. யுத்தம் முடிந்து விட்டதாக இதே அரசு அறிவித்து மூன்று வருடங்கள் கடந்தும் தமது வீடுகளுக்குத்திரும்ப மீண்டும் மீண்டும் ஏதோவொரு வகையினில் மக்கள் போராடவே வேண்டியிருக்கின்றது. நடமாடத் தடை, உள் நுழையத் தடை என தடைகளால் பல கிராமங்கள் நிரம்பி வழிகின்றன. நில ஆக்கிரமிப்பிற்கு எதிராகக்கூட ஒன்று திரளமுடியாத அச்சமூட்டும் சூழல் தாயகமெங்கும் பரவிக்கிடக்கின்றது. கடந்து போன இருண்ட காலம் கண் முனனே இன்றுவரை விரிந்ததாகவே செல்கின்றது.

கடந்த காலங்களில் எல்லாவற்றிற்கும் முன்னின்றவர்கள் பின்னர் களையெடுப்பு என்ற பேரினில் சுட்டுக் கொல்லப்பட்டு வீதியோரங்களில் வீசப்பட்டதும் கடத்தப்பட்டவர்கள் இன்று வரை வீடு திரும்பாமையும் ஒன்றும் இரகசியமானதல்ல. நிம்மதியிழந்த அவர்களது குடும்பங்கள் இன்று வரை காணாமல் போன அவர்களை தேடி அலைந்து கொண்டிருக்கின்றன. இது துயர் நிறைந்த நீண்டதொரு துன்பியல் கதை.

இத்தகைய சூழலில் மீண்டுமொருமுறை பலியாடாவதற்கு எவருமே தாயகத்தில் இப்போது தயாராகவில்லை. இத்தகைய சூழலில் புலம்பெயர் தேசத்து உறவுகளிடமிருந்து எழுகின்ற குரல்களே நில ஆக்கிரமிப்பு,திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் மற்றும் இராணுவ மயமாக்கல் என்பவற்றிற்கு எதிராகப் பலத்து ஒலித்து வந்தன. இத்தகைய சூழலினில் இலங்கை அரசும் புலம்பெயர் தேசத்து உறவுகளது குரலால் தலையிடிகளை எதிர்கொண்டேயிருந்தது. இக்குரல்களை அடக்க முழு அளவில் திட்டமிட்டு மாற்று நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. குறிப்பாக தமது ஆதரவு தரப்புகளை களமிறக்கியிருந்ததுடன் ஆட்களை மூளைச்சலவை செய்யவும் தவறவில்லை.

ஆனாலும் தற்போது புலம்பெயர் தேசத்துக்குரல்கள் மிகவும் பலவீனமடைய தொடங்கியுள்ளன. தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அகிம்சை வழிப்போராட்டங்கள் ஒரு தொடக்கப் புள்ளியாக இருக்கின்ற போதும் அவை முழு அளவில் மக்கள் பங்கெடுக்கும் போராட்டங்களாக இன்னும் பரிணமித்திருக்கவில்லை. அது வெறுமனே அரசியல் கட்சிகளதும் அவைகளது தலைமைகளதும் பரிணமிப்பாகவே இருந்து வருகின்றது. யாழ்ப்பாணத்திலும் நெல்லியடியிலும் பகிரங்கமாகவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினது தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் இந்த விடயத்தைப்பிரஸ்தாபித்திருந்தார். மக்கள் இனிமேலும் வீடுகளுக்குள் முடங்கியிருக்க முடியாது. வீதிக்கு இறங்கியாக வேண்டும். இல்லாவிடின் நாளை எதுவும் மிஞ்சியிருக்கப் போவதில்லையெ அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதி டெல்றுக்ஷனின் இறுதிச் சடங்கு நிகழ்வில் உரையாற்றிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனும் அதே கருத்தை முன் வைத்திருந்தார். முன்னர் நாங்கள் பலமாக இருந்த போது எமக்காகப்பேசிய சர்வதேசம் முன் வந்திருந்தது. ஆனால் இப்போது அவ்வாறில்லை. நாங்கள் பலவீனப்பட்டுள்ள நிலையில் சர்வதேசமும் எம் தொடர்பில் கண்டுகொள்ளாமல் அக்கறையற்றிருக்கின்றது. முதலில் மக்கள் வீதிக்கு உரிமைகளை கேட்டு இறங்க வேண்டும். எங்கள் குரல்களை ஓங்கி ஒலிக்கா விட்டால் சர்வதேசம் எம்மைத் திரும்பிப் பார்க்க மாட்டாதெனத்தெரிவித்தார்.ஏனெனில் இலங்கை அரசு கூறிக்கொள்வது போன்று தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் ஏதுமில்லையென்பதை ஏற்றுக்கொள்வது போலாகிவிடும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேசத்தை எதிர்பார்த்திருப்பதாக ஒவ்வொரு விடயத்திலும் கூறியே வருகின்றது. காணிப்பிரச்சினையிலிருந்து வீதிப்பிரச்சினை ஈறாக சர்வதேசத்திற்கு அழைப்பு விடுப்பது என்பது அவர்களை பொறுத்த வரையினில் பழகிப்போயுள்ளது.

அதிலும் குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் கற்றுக் கொண்ட பாடங்கள் பரிந்துரைகளை அமுல்படுத்தும் விடயத்திலும் 47 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அவசர அவசரமாகக்கூட்டமைப்பு அப்போது கடிதங்களை அனுப்பி வைத்திருந்தது. முன்னதாக அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கூட்டமைப்பு நிராகரிததேயிருந்தது. எது எவ்வாறிருப்பினும் இறுதிவரை கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பக்கம் இலங்கை அரசு எட்டிக்கூடப் பார்த்திருக்கவில்லையென்பது தனிக்கதை.

இத்தகைய சூழலினில் சாதாரண வலி நிவாரணத்தைக்கூட இலங்கை அரசு யுத்தத்தின் பின்னர் கூடத் தரத்தயாராகவில்லை. ஆனால் மறுபுறத்தே திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நில ஆக்கிரமிப்பு, குடியேற்றமென செயற்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. உடனடியாக அவற்றைத் தடுத்து நிறுத்துவதே தற்போதைய தேவையாகும். சர்வதேசத்தின் கவனத்தை அதன் பால் ஈர்க்க வீதியில் இறங்கிப் போராடுவதை தவிர மாற்று வழி இல்லாதேயுள்ளது. அது தாயகத்திலாயினும் சரி எம்மவர் புலம் பெயர்ந்து வாழும் தேசங்களிலாயினும் சரி முன்னெடுக்கப்படுவது காலத்தின் தேவையாகவுள்ளது. உரிய திட்டமிடல்களுடனேயே மக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனாலும் மக்களை அவர்களது அன்றாடப் பிரச்சினைகளுக்காகவேனும் குரல் கொடுக்கும் வகையினில் ஒன்று திரட்ட தமிழ் அரசியல் தலைமைகள் தவறியேயுள்ளன. பெரும்பாலான கட்சி கள் அடி மட்டத்திலிருந்து தமது கட்டுமானங்களை எழுப்பியிராமையும் மக்களை ஆட்திரட்ட முடியாதிருப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் கூட அதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாக இருந்திருந்தது. வழமை போன்றே கூட்டமைப்பு இம்முறையும் கிடைத்த சந்தர்ப்பத்தை கோட்டைவிட்டேயுள்ளது. யாழ்.குடாநாட்டில் மட்டும் 13 உள்ளூராட்சி மன்றங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வசமுள்ளன. தலைவர்கள், பிரதித்தலைவர்கள், அங்கத்தவர்கள் அவர்கள் வசமுண்டு. மக்களது அன்றாடப் பிரச்சினைகளை நன்கு அறிந்துள்ள அவர்கள் தம் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய கடப்பாட்டையும் கொண்டவர்கள்.

ஆனால் அவர்களுள் மிகக் குறைவானோரே மக்கள் போராட்டங்களில் கலந்து கொள்ள வீதிகளுக்கு இறங்குகின்றனர். அவர்களை வழி நடத்தவேண்டிய கட்சித்தலைமையோ அதனைச் செய்ய தயாராகவில்லாதுள்ளது.

இனிவருங்காலங்களில் அகிம்சை வழி எதிர்ப்புப் போராட்டங்களே முதலில் மீண்டும் முனைப்புப் பெறலாமென்ற எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் சர்வதேச அழுத்தங்களுக்கு அடி பணிந்து இலங்கை அரசு அதற்கான அனுமதியையேனும் வழங்க வேண்டியதாக இருக்கின்றது. அதனைப்பயன்படுத்திக் கொள்வதே தமிழர்களுக்கு கிட்டியுள்ள சந்தர்ப்பமாகும். தாயகத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் இணைந்ததாக அத்தகைய போராட்டங்கள் முன்னெடுப்பதே முக்கிய இப்போதைய தேவையுமாகும்.



Super Market
JALLAHAM
GmbH
யாழகம்
இலங்கையில்லிருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் உடன் மீன்வகைகள்.
ஒவ்வோரு மாதமும் 25ஆம்
திகதி முதல் அடுத்த மாதம்
5ஆம் திகதி வரை அனைத்து
மளிகைப்பொருட்களும் 10%
விலைக்கழிவில்!
இலங்கை இந்திய
டொமினிக்கன் நாடுகளில்லிருந்து
இறக்குமதி செய்யப்படும்
உடன்மரக்கறிவகைகள்.
மிகக்குறைந்த விலையில்
பொருட்க்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.
NIDO
SALE
100CHFக்கு மேல்
பொருட்க்கள் வாங்கினால்
5KG அரிசி இலவசம்!
மலிவு!
மலிவு!
குறை இருப்பின் எம்மிடம் சொல்லவும்
நிறை இருப்பின் நண்பரிடம் சொல்லவும்
Avenue de Marges 88
1004 Lausanne
021 625 13 13
Bernstrasse 24A
3072 Ostermundigen
031 931 14 14

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?



(பாகம் 08)

அன்புச்செல்வன்.

ஈழத் தமிழர் இழந்தது எதை என்பதை யாரும் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தாம் சார்ந்துள்ள கட்சி, குழு என்கிற சிறைக்குள் சிக்கிக் கொண்டு அவரது சிறைதான் தங்கச் சிறை என நினைத்து ஒருவரோடு ஒருவர் மோதி அனைவரின் அழிவுக்கும் வழி தேடி வருகின்றனர். நடந்து முடிந்த போரும் புலிகள் எதிர்ப்புச் சக்திகள் ஈழத் தமிழர்களின் எதிரிகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைந்து நடத்தி முடித்த இனத் தற்கொலைக்கு ஒப்பான போராட்டமே.

இன்று எவரும் தம்மைத் தமிழினத்தின் அங்கமாகக் கருதுவதில்லை. அதனால் தமிழரசுக் கட்சி, புளொட், ஈரோஸ், தமிழ்க் காங்கிரஸ் என உறுப்பினர் ஒவ்வொருவரும் தம்மை தனித்துவமிக்க தலைவர்களாக நினைத்துச் செயற்பட்டு வருகின்றனர். தமிழர் தேசியக் கூட்டணி என்ற கட்சியாகப் பதிவு செய்யப்படாத, பதிவு செய்யும் திறனும் இல்லாத சாம்பாரை பொது மக்களிடம் சுவை மிகு பாயாசம் எனப் பரிமாறத் துடிக்கும் இழுபறிகளும் நடக்கின்றன. இவர்களின் சிந்தனையில் அப்பாவித் தமிழ் மக்களின் அவல நிலை கனவிலும் இருக்கும் எனில் இப்படி நடப்பார்களா?

1976 லேயே பாராளுமன்ற அரசியலால் தமிழர் தமது உரிமைகள் எதுவும் பெற முடியாது என்ற பட்டறிவில் எடுத்த வட்டுக்கோட்டைப் பிரகடனமும்; பின்னர் திம்புவில்; எடுத்த தீர்மானமும் இவர்களின் மனதில் அறவே மறைந்து விட்டது. இன்று இவர்கள் நடத்தும் பாராளுமன்ற அரசியல் வெறும் அர்த்தம் அற்ற மரக் கதிரைகளுக்கான போராட்டங்கள் என்பதை அவர்களே அறிவர். ஆனால் அவர்களின் மூலம் அறிந்தும் அறியாமலும் சிங்களத்துக்கும் தமிழ் ஈழத்தை எதிர்க்கும் அரசுகளின் தேவைகளுக்கும் உதவி வருகின்றனர்.

இவர்கள் தாங்கள் தேர்தலில் போட்டி இடுவதே அரசின் கையாட்களை வெற்றிபெற்று விடக் கூடாது என்பதற்காகவே என்று கூறுகின்றனர். இதே காரணத்தை 1956 முதலே தமிழரசுக் கட்சியும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூறி வந்தனர். 1965ல் தமிழ் அரசுக் கட்சி டட்லியுடன் சேர்ந்து தமிழருக்கு விரோதமான அரசியலை ஆதரித்தனர். பின்னர் 1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணியாகித் தனித் தமிழ் ஈழம் என மக்களை ஏமாற்றி வெற்றி பெற்று ஜே.ஆரின். தேவைக்காகத் தமிழீழ விடுதலை இயக்கங்களை பயங்கரவாதிகள் எனவும் தாம் காந்தீய வாதிகள் எனவும் காட்டிக் கொடுத்து அரசியல் நடத்தினர்.

இன்று தமிழர் தேசியக் கூட்டமைப்பு என வெளியில் பேசிக் கொண்டாலும் அது ஒரு கட்சி யெனவோ தனக்கெனக் கட்சிச் சின்னம் ஒன்றைத் தேடிக் கொள்ளவோ முடியாத கூட்டமாகத்

தமிழரின் தேசிய அரசியலை பேசி வருகின்றனர். அவர்களின் தயவால் இன்று தனித் தமிழ் ஈழக் கோரிக்கையும் அதன் வலுவும் சர்வதேச சமூகத்தின் முன் காற்றில் கரையும் கற்பூரம் போல் நிமிடத்துக்கு நிமிடம் கரைந்து காணாமல் போகிறது. எனவேதான் சில ஆய்வாளர்கள் துணிச்சலாகத் தனித் தமிழ் ஈழம் சாத்தியம் இல்லை என நம்பவும் எழுதிவரவும் செய்கிறார்கள்.

உடனடியாகத் தமிழீழம் மீட்டெடுக்கப் படாது விட்டால் உலகத் தமிழ் இனத்துக்குக் குறிப்பாக ஈழத் தமிழ் இனத்துக்கு அது எத்தகைய பாரதூரமான இழப்பு என்பதை இப்பகுதியில் பார்க்கப்பட வேண்டும் என்பதால் இத்தனை தூரம் எமது அரசியல் செல்நெறி பற்றி விமர்சிக்க வேண்டி உள்ளது.

இந்நிலை தாயகத்தில் மட்டும் அல்ல புலம்பெயர் அரசியலிலும் நாம் இதே தவறை இழைத்து வருகிறோம். யாரும் எவருக்கும் புத்தி சொல்ல முடியாத நிலை. யாரும் யாருடைய தலைமையையும் ஏற்கும் நிலையும் கிடையாது. தனித் தனியாக மோதிக் கொள்ளும் இவர்களால் தமிழர் என்ற ஒருமையில் இணைந்து கொள்ள முடியாதவர்களாக உள்ளனர்.

அமைப்பு ரீதியாக வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ் இனத்துக்கான ஒரு பொது அரசியல் செல்நெறியில் இவர்களால் ஒன்றுபட முடியாது இருப்பது ஏன்? தமிழர் என்றால் இப்படித்தான் எனக் கூறித் தப்பித்துக் கொள்வதால் தமிழ் இனம் தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியுமா?

முடியும் என இவர்கள் நம்புவதோடு மற்றவர்களையும் நம்பச் சொல்கிறார்கள். இவர்கள் எல்லாரும் தலைமை வகிக்கும் வகையில் தனி மனிதத் தலைமையைத் தவிர்த்து ஒரு கூட்டுத் தலைமையை ஏன் ஏற்படுத்தி ஒருங்கிணைந்த அமைப்பாகச் செயற்படக் கூடாது?

இவர்கள் ஒரு பேருண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதுதான் இவர்களில் எவரும் தனித்துவமானவர்களோ தானாக அவதரித்தவர்களோ கிடையாது. இவர்கள் அனைவருக்கும் ஒரு தாயும் தந்தையும் இருந்தே ஆகவேண்டும். அவர்களுக்கும் அவ்வாறே. இப்படியே எமது மூதாதையரின் வரலாறு பல்லாயிரம் பல இலட்சம் ஆண்டுகளுக்கு விரிந்து கிடக்கிறது.

நாம் பேசும் மொழியும் எமது பூர்வீகமும் நாமாகத் தேடிய பெருமைகள் அல்ல. எல்லாம் பல்லாயிரம் ஆண்டுகளாக எமது முன்னோர்களின் உழைப்பும் அறிவும் தேடி எமக்கு தந்தவை. அவற்றின் பெருமைகளும் பெறுமதியும் எம்மில் பலருக்கு நினைவில் வருவதில்லை. நினைத்துப் பார்க்கவோ அறிந்து கொள்ளவோ ஆர்வமும் கிடையாது. அப்படி ஏதும் இருந்தால் எமது பாரம்பரியம் மிக்க தேசமும் பரம்பரை பண்பாட்டு நாகரிக விழுமியங்களையும் பிற இனத்தவரின் காலடியில் மிதிபட இடம் அழிப்போமா?

நாம் இழந்தது ஒரு நாளின் உழைப்பு என்றாலே தவிக்கிறோம் ஒருமாதத்தின் உழைப்பு என்றால் அடுத்த வேளை உணவுக் காக ஏங்குவோம். நாம் விட்டு வந்த ஈழதேசம் எத்தனை ஆயிரம் வருடங்களாக எத்தனை ஆயிரம் எமது முன்னோர்களின் வாழ் நாள் உழைப்பில் எமக்குக் கிடைத்தது. அதனை எமக்குத் தர எத்தனை ஆயிரம் பண்டார வன்னியன்களும் சங்கிலியன்களும் தமது உயிரைக் கொடுத்துப் பாதுகாத்தனர்?

1956 முதல் எத்தனை இலட்சம் பேர் தமது உயிரை இந்தப் போரில் இழந்தனர்? நம் மாவீரர் சிந்திய உழைப்பும் வேர்வையும் இரத்தமும் கொஞ்சமா? இன்றும் தமது இன்னுயிரையும் உயிரினும் மேலான மானத்தையும் காப்பாற்றப் போராடி மடிவோரின் நிலையை ஏன் மறக்கிறோம்?

இன்று எமது கையை விட்டு நழுவும் எம் தேசத்தை இன்றே நாம் காப்பாற்றாது விட்டால் முழுமையாக இழந்த பின்னர் எப்படி அதனை மீளப் பெற முடியும்?

யூத மக்களுக்கு தமது இழந்த தாயகத்தை மீளப் பெறவேண்டும் என்ற நினைப்பு ஏற்பட 2000 வருடங்கள் தேவைப்பட்டது. அதுவும் உலகம் எங்கும் அலைந்து அகதி வாழ்விலும் அவதியிலும் இனஅழிப்பிலும் காலத்தைத் தொலைத்த பின்னரே அவர்களுக்குத் தமது தாயகத்தின் அருமை தெரியவந்தது.

இன்றுள்ள எமது அரசியல் தலைமை எனக் கூறிக் கொள்ளும் த.தே.கூ. தனி ஈழம் என்ற பேச்சைத் தவிர்த்து தேசத்தையும் மக்களையும் சிங்களத்தின் இனஅழிப்புக்குப் பலியாக்கும் அரசியலை நடத்துகிறது. எமது தேசத்தின் வரலாறு 35 இலட்சம் ஆண்டுகளுக்கும் அதிகமானது என இரணைமடு மண்படை ஆய்வுகளை நடத்திய முன்னாள் இலங்கை

அகழாய்வுத் திணைக்கள ஆணையாளர் கலாநிதி எஸ்.யூ. தெரணியகல கூறியதை இந்திய ஆங்கில ஏடான புரண்ட் லைன் பதிவு செய்துள்ளது.

நவீன கடலடி ஆய்வுக் கருவிகள் மூலம் காவிரிப் பூம்பட்டினத்தின் கட்டிட இடிபாடுகளைச் சென்னைக் கடலினுள் ஆய்வு செய்த கடலாய்வு நிறுவனம் அவை கி.மு. 9500 ஆண்டுகள் அதாவது இற்றைக்குச் சுமார் 12000 வருடங்களுக்கு முந்தியவை என முடிவுசெய்துள்ளது. இங்கு நடந்த ஆய்வுகளை இந்திய மத்திய அரசு தொடர விடாது நிதி இல்லை எனத் தடுத்துவிட்டது.

ஏனென்றால் அது குஜராத் பகுதியில் நடத்திய கடலாய்வில் துவாரகையின் அழிபாடுகள் 7500 ஆண்டுகளுக்கு முந்தையது எனத் தெரியவந்ததால் தமிழரின் வரலாறு இந்தியத் துணைக் கண்டத்தையே தமிழரது என்றாக்கி விடும் என்ற பயம் அல்லாது வேறு இருக்க முடியாது. ஆரியரின் வசம் உள்ள மத்திய ஆட்சி திராவிடர் பற்றிய வரலாற்றை மறைக்கவே செய்கிறது.

முதலில் தெரிய வந்த மொகஞ்சதாரோ அகழாய்வுகளை ஆரியரது எனப் பேசி வந்தவர்களுக்கு பின்னால் அது திராவிடரது என ஆய்வாளர்கள் முடிவு செய்த பிறகு இந்திய அரசின் அகழாய்வுகள் பற்றிய பார்வை ஆரிய திராவிட பேதத்தால் பாதிப்புக்கு உள்ளாகி விட்டது. நடந்து முடிந்த ஈழ விடுதலைப் போரும் முள்ளி வாய்க்கால் அழிவும் சிங்களத்தின் வடக்கு கிழக்கு நிலப் பறிப்பும் ஆரிய திராவிட மோதல் என்பதே உண்மைக் காரணி.

**தமிழ் ஈழத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவையை சுப்பிரமணியசுவாமி தமது கட்டுரை ஒன்றில் ஆரிய மேலாதிக்க கருத்தை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார். ஆரிய பௌத்த சிங்களம் என்பதே சிங்களத்தின் போர்க் குரலாக உள்ளது. பல்லாயிரம் ஆண்டு பாரம் பரியம் கொண்ட தமிழினம் 2600 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட சிங்களத்திடம் அடிமையாவதா? இவற்றுக்கு ஒரே பதில் தனித் தமிழ் ஈழமே!**


(மேலும் தொடரும்)




GENERALI
Versicherungen
GENERALI GRUPPE
காப்புறுதியே வாழ்வின் காப்பரண்
WWW.GENERALI.CH
எமது காப்புறுதித்திட்டங்கள்
தொழில் நிறுவனங்களுக்கும் தனி நபருக்குமானது
Versicherungen-Vorsorge für
Firmen und Privatkunden
அதிக வட்டியுடன் வங்கி வைப்புக்கணக்கு
Bank, Anlagekonto
Berater:
MATHAN SELVARATNAM
ZENTWEG 21D, 3006 BERN
058 473 24 44
076 303 22 16
EMAIL: mathan.selvaratnam@generali.ch
சுவிஸ் நாட்டில் அனைத்தின
மக்களினதும் நம்பிக்கைக்குரியதும்
இலாபம் தரவல்லதும் எமது
நிறுவனம்.
எம்முடன் தொடர்பு கொண்டு
தேவையான ஆலோசனைகளை
இலவசமாகப்
பெற்றுக்கொள்ளவும்

மருத்துவம்

# பெண்ணே உன் அழகின் விலை என்ன?



-மனோ

பிறக்கும் போதே அழகாய்ப் பிறந்துவிட்டால் அதை விட அதிர்ஷ்டம் வாழ்வில் வேறு இருக்க முடியாது. அதுவும் பெண்கள் எனில் அது உயிர் போன்று உயர்வாகப் போற்றப்படும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அகத்தில் உள்ள ஆபத்தைப் புற அழகு பெரும்பாலும் மறைத்து விடும். எல்லாவற்றுக்கும் மனமே காரணம் என்றாலும் அந்த மனமும் புற அழகு இல்லையானால் தன்னம்பிக்கையும் இல்லாது வாழ்வே சின்னா பின்னமாகி விடும்.

சத்திர சிகிச்சை மூலம் அழகு படுத்தல் என்பது முதலில் பிறப்பால் ஏற்பட்ட அவயவக் குறைபாடுகளான வாக்குக் கண்கள், பிளந்த உதடுகள், ஒழுங்கற்ற மூக்குகள் காதுகளைச் சத்திர சிகிச்சைகள் மூலம் சீர் செய்து நோயாளிகளை நம்பிக்கை ஊட்டும் வகையிலேயே அமைந்திருந்தன. ஆனால் விரைவில் அது ஒரு பணம் குவிக்கும் தொழிலாக முன்னேறி விட்டது.

அழகுச் சத்திரசிகிச்சை மூலம் தனது கறுப்புத் தோலையே வெள்ளையாக்கி அதனால் பெரும் வரவேற்பைப் பெற்றார் அமெரிக்கப் பொப் பாடகரான மைக்கல் ஜாக்சன். அதற்காக அவர் எடுத்து வந்த வலி நிவாரண மருந்துகளே அவரது திடீர் மரணத்துக்குக் காரணமானதும் அதன் பொருட்டு அவருடைய வைத்தியர் சிறைத்தண்டனை பெற்றதும் நாம் அறிந்ததே.

அழகு படுத்தல் சிகிச்சையில் பெண்களின் மார்புச் சிகிச்சை மிகப் பெரும் பணம் திரட்டும் தொழிலாக மாறிவிட்டது. அழகான மார்புகள் இருந்தால் பாதி வெற்றி என்ற அளவுக்கு நிலைமை உள்ளது. இங்கிலாந்தில் இதன் ஆண்டு வருமானம் 2.3 பில்லியன் பவுண்டுகளாக உள்ளது. சுவிஸில் மார்பு அழகுக்கு 30,000 பிராங்குகள் வரை செலவாகிறது. சில ஆண்டுகளுக்கு முன் பிரான்சில் மார்புக்குள் வைக்கப்படும் செயற்கை மார்புகளால் பல வகையான பின்விளைவுகள் ஏற்பட்டு அவற்றை மீள எடுத்து மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதனால் ஐரோப்பிய நாடுகள் எங்கும் விலையான செயற்கை மார்புகளை தயாரிப்பாளர்கள் மீளப் பெறவேண்டி இருந்தது. பிரான்சில் 30,000 பெண்களின் செயற்கை மார்பகங்கள் அகற்றப் பட்டும் மேலும் செயற்கை மார்புகளைப் பெற்ற 40,000 பெண்கள் கண் காணிக்கப் பட்டும் வருகின்றனர்.

இப்போது பிரித்தானியாவில் கிளம்பி இருக்கும் எதிர்ப்பு இத்தகைய செயற்கை மார்புகளைப் பொருத்தும் பேர்வழிகள் பற்றியதாகும். நாய்களுக்கும் ஏனைய செல்லப் பிராணிகளுக்கும் சிகிச்சை செய்யும் வைத்தியர்களோ அல்லது அழகு நிலைய வைத்தியக் கல்வி பயிலாதவர்களோ இவற்றைப் பொருத்துகின்றனர். மேலும் அழகூட்டும் ஊசி மருந்துகளை மருத்துவக் கல்வி இல்லாத அழகு நிலைய ஊழியர்களே கையாள்வதை ஏற்க முடியாது எனப் பெண்ணியவாதிகள் குரல் எழுப்பி வருகின்றனர். இன்று பரவலாகச் செய்யப்படும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் மக்கள் ஏமாற்றப் படுகிறார்கள் என்பதே இவர்களின் குற்றச்சாட்டாக உள்ளது.

இதே வேளையில் சுவிஸில் கதை வேறு விதமாகப் போகிறது. அழகுச் சிகிச்சைச் செலவுகளைச் செலுத்துவதில் 6 பெண்களில் ஒருவர் தவறுகிறார் என சட்டப் படி கடன் அறவிடும் நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே கடன் அடிப்படையில் இத்தகைய சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

அழகுச் சத்திர சிகிச்சைக்கு எவ்வளவு செலவாகும் எனத் தெரியுமா? வேண்டாத கொழுப்பை அகற்ற 4,000 முதல் 8,000 பிராங்குகள். மார்புச் சத்திர சிகிச்சைக்கு 10,000 முதல் 15,000 பிராங்குகள் வரை. இதில் அதிகமானோர் 18 முதல் 25 வயதினர் என்பதில் இருந்து பல பிஞ்சிலேயே பழுத்து விடுவது தெரிகிறது.

இது எல்லாவற்றிற்கும் பணம் இறைப்பது ஏமாந்த ஆண்கள் என்பதால் இந்தப் பணம் இவர்களுக்குப் பெரிதாகத் தெரிவதில்லை. பெரிதாகத் தெரிய வேண்டியவை பெரிதாகத் தெரிய வைத்தால் பெரிதாக வருமானம் பெறலாம் என்ற பட்டறிவு பெண்களுக்கு இருக்கும் வரை பணம் ஒரு பொருட்டல்ல. ஆனால் இவ்வளவை உழைக்கும் வைத்தியர்கள் கொடுத்து வைத்தவர்கள்தான்.



IMPOrtas Cash & Carry

# Cash & Carry in Zurich
## Biggest Asian Shop in Swiss




**Direct Importers and Solo Distributors of**

Kings · Subash · ELAKKIA · Niru BRAND · SURYAA · Maliban · Rubicon

Importas Cash & Carry, Baslerstrasse 102, 8048 Zurich, Switzerland. Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56

IMPOrtas Cash & Carry

**GUTSCHEIN: CHF 10.- (Ten Franks only)**

Bring this coupon and avail CHF 10 discount on purchasing any product

Note: This voucher is valid only for purchases of minimum 100.--- CHF & not valid on offers!!

Valid until 31.10.2012

# இல்லாத ஒன்றுதான் ஈழம்! அதுக்குப் போராட்டமா?



இப்படி இந்தியக் காங்கிரஸ் கட்சியின் எம்.பிக்கள், பிரச்சாரகர்கள் மிக ஆக்குரோசமாகத் தொலைக் காட்சி மேடைகளில் வாதிடுகிறார்கள். அங்கே காங்கிரஸ் கட்சி மேடை போட்டு மக்கள் முன் பேசமுடியாது. எனவே அவர்களுக்கு உள்ள அதிகார பலத்தைக் கொண்டு தொலைக் காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் மட்டும் பேச முடியும் என்பதால் பேசுகிறார்கள்.

இதனால் நம்மவர் சிலருக்கும் இது உண்மையாக இருக்குமோ? என்ற சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. ஈழம் என்பது இலங்கையில் கண் கண்ட அரசாக இருந்த ஒன்றை மே 19, 2009 க்குப் பின்னர் எதற்காக இப்படி மூடிப் புதைக்க வேண்டும் ?

இந்தப் போரை நடத்தி முடித்த பெருமை உலகின் எல்லா முக்கிய நாடுகளுக்கும் உண்டு. இதுதான் சிங்களத்தின் துருப்புச் சீட்டு. இதை வைத்தே மிக நெருக்கடியான 3 வருடங்களைச் சிங்களம் கடத்தி விட்டது. காலம் கடத்தியது மட்டும் அன்றி தமிழ் இனப் படுகொலைத் திட்டங்களையும் அது வெற்றிகரமாக இன்றுவரை நடத்தி வருகிறது.

எனவே உலகில் எவர் மகிந்தரைக் கோட்டில் ஏற்றிக் குற்றவாளியாக நிறுத்த முனைந்தாலும் இந்தியா, அமெரிக்கா, ஐ.நா.வையும் சேர்த்து இழுக்கும் அளவுக்கு நடந்த போரில் இந்த நாடுகளின் பங்களிப்பு நேரடியாகவும் மறைமுகமாகவும் உள்ளன.

இலங்கையில் தமிழர் உரிமை பற்றி எவரும் வாய் திறந்து பேச முடியாதபடிக்குச் சிங்களம் தனது இராணுவ பாராளுமன்ற அதிகார பலத்தை வைத்து ஆட்சி செய்து வருகிறது.; டக்லஸ் தேவானந்தா முதல் கருணா, பிள்ளையான் வரை தனித் தமிழ் ஈழம் என்ற விடுதலைப் போர்க் குரல் எழுப்பிச் சிங்கள அரசை எதிர்த்துப் போராடியவர்கள்தான் இன்று அரசின் அமைச்சர்களாகவும் உள்ளனர்.

இன்று அரசுக்கு எதிரானவர் என வெளியில் பேசித் தமிழ் மக்களின் வாக்குகளைப் பொறுக்கிப் பதவிக் கதிரைகளைப் பெற்று வரும் இரா.சம்பந்தன் முதல் சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் வரை ஈழம் பேசிய காலம் ஒன்று இருந்தது. மரணபயத்தால் இன்று மறந்தும் அவர்களின் வாயில் ஈழம் என்றோ தனி ஈழம் என்றோ வருவதில்லை இனிமேலும் வராத படிக்கு சிங்களம் பார்த்துக் கொள்ளுகிறது.

2014 வரப்போகும் இந்திய பாராளுமன்றத் தேர்தல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை பறித்துவிடும் என்ற பயம் தொற்றிக் கொண்டு விட்டது. ஈழம் பற்றிப் பேசினால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்ற நிலை. ஆனால் இந்திய அரசால் ஈழம் மட்டும் அல்ல வெறும் 13வது திருத்தச் சட்டம் என்ற ஐஸ் பழத்தைக் கூடச் சிங்களத்திடம் பெற முடியாத நிலையில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் மற்றும் தி.மு.க. கட்சிகள் உள்ளன.

இன்று தமிழக அரசியலில் ஈழம் ஆதரவுக் குரல் தெருவுக்குத் தெரு கிராமத்துக்குக் கிராமம் சினிமா இயக்குநர் சீமான் மற்றும் மே 16 இயக்க திருமுருகன் போன்ற துடிப்பு மிக்க இளம் தலைமுறையினரால் எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஒரு புதிய கிராமத்துக்கே ஈழம் எனப் பெயர் சூட்டி உள்ளனர். கேரளத்தில் ஒரு தேனீர்க் கடையே பிரபாகரன் தேநீர் கடை எனப் பெயரிட்டு மக்கள் நடத்தும் அளவுக்கு முள்ளி வாய்க்கால் படு கொலைகள் தமிழக மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனவேதான் அடுத்த தேர்தலை நினைத்து கலைஞரே டெசோ அமைப்பை மீண்டும் உயிர்ப்பிக்கத் துணிந்தார். மத்தியில் ஆளும் கட்சியைத் தீர்மானிக்கும் மாநிலமாகத் தமிழகம் உருப் பெற்று விட்டதை வட மாநில சட்ட சபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி பெற்ற மரண அடி காட்டிவிட்டது.

இந்திய அரசு மாகாண அரசை வாங்கித் தருவதாகச் சொல்லித்தான் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் அழுகையை ஆற்றி வந்தது. இப்போ அதுவும் வராது எனத் தெரிந்ததும் ஏதோ தருவதைப் பெறச் சொல்லி த.தே.கூட்டமைப்புக்கு நிர்பந்தம் கொடுக்கிறது. எதுவுமே தராத போது எதை வாங்கித் தொலைப்பது என த.தே.கூ. வெறுங் கையால் தமிழ் மக்களுக்கு முழம் போட்டுக் காட்டுகிறது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஒரே நேரத்தில் தண்ணி காட்டும் விளையாட்டை மகிந்தர் ஆடிவருகிறார். எனவேதான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கோபண்ணா, நாச்சியப்பன், நாரயணசாமி போன்றவர்கள் ஈழம் என்ற எதுவுமே இருந்ததில்லை என அடித்துப்பேசித் தப்பிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் கலைஞர் இலக்கிய ஆதாரம் மறுக்க முடியாத சரித்திரப் பதிவுகள் உள்ளதால் இருக்கிறது என்கிறார். அதுவே தமது கனவு எனக் கதையும் விடுகிறார். அவரது நடிப்புகள் இனியும் தொடரும்.



அறிவழகன்

# மக்கள் அனைவரும் விடுதலைக்காக, என்பது மக்களுக்காக!




தியாக தீபம் திலீபனின் 25வது ஆண்டு நினைவு நிறைவில் ஈழத்தமிழினம் கால்பதித்திருக்கிறது. வாய்ச்சொல்லில் வீரம் காணும் பலருக்கு நடுவே, செயல்வீரனாக வாழ்ந்து காட்டியவன் திலீபன் அண்ணா. தலைவன் என்ற தாரகமந்திரத்தைத் தவிர, வேறு எதையும் அவன் உதடுகள் உச்சரித்ததில்லை......, அவன் இலட்சிய வீழும் அந்தக்கணம் வரையில்....! விடுதலைக்காக எத்தைகைய உயரிய தியாகத்தையும் செய்வதற்கு, ஒரு தமிழனால் முடியும் என்பதை உலகிற்கு எடுத்தியம்பியவன், வேறு எவராலும் செய்யமுடியாத தியாகத்தை தனித்து நின்று செய்துகாட்டியவன்.

அன்று அவனின் பின்னால் திரண்ட எத்தனையோ தமிழர்களுள் இன்று எத்தனை பேர் விடுதலைக்காக அணிவகுத்திருக்கிறோம்...? கால ஓட்டத்திலும், கண்மூடித்தனமான கட்டுக்கதைகளிலும், விடுதலை பற்றிய விதண்டாவாதமான கேள்விகளிலும் இன்று நாம் சிதறுண்டிருக்கிறோம். அன்று இருந்ததைப்போல, ஒட்டுமொத்த மக்களும் விடுதலையென்ற ஒரே இலட்சியத்திற்காக தமது பங்களிப்பினைச் செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு முன்வரும்போதுதான் விடுதலைக்கான மக்கள் புரட்சியும் அதன்மூலமான விடுதலையும் சாத்தியப்படும். ஈழ விடுதலைப் போராட்டமானது தியாகங்களின் சிகரங்களைத் தொட்ட சந்தர்ப்பங்களில், தியாகச்செம்மல் திலீபனின் தியாகம் மிக முக்கியமானதாகும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பல சந்தர்ப்பங்களில் ஆயுத ரீதியிலான வன்முறை வழியைத் தவிர்த்து அன்புவழியைக்கடைப்பிடிக்க முனைந்தபோதெல்லாம், எதிர்மறையான விளைவுகளையும் ஏமாற்றங்களையுமே பரிசாகப் பெற முடிந்தது. அன்புவழி பேசிய காந்தியின் தேசம், தனது காலால் ஈழத்தமிழர்களை நசுக்கியும், திலீபனின் தியாகத்தை எடுத்தெறிந்தும் பேசியதை இன்று சிதறுண்டு நிற்கும் ஒவ்வொரு தமிழனும் உணர்வானாகில், மக்கள் புரட்சி மீண்டும் வெடிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரு துளி நீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருந்த திலீபனின் உடல் வாடி வதங்கி, மெலிந்து சுருண்டு, நிலைகுலைந்து நினைவிழந்துபோய் அந்த உன்னத ஆன்மா அவன் உடலைவிட்டு பிரிந்த போதும் மௌனமாய் இருந்து ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கே துரோகம் செய்ததன் மூலம் ''காந்தியம்'' என்ற திரைக்குப் பின்னாலிருந்த தனது உண்மையான கோரமுகத்தினை வெளிக்காட்டியது காந்திதேசம்.

இந்திய தேசத்தின் ஒரு பகுதியில் ஈழத்தமிழ் சொந்தங்களின் உடன்பிறப்புகளான தமிழகத்துத் தமிழர்கள் வாழும்வரை இந்திய வல்லரசு என்பது ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக் கவசமாகவே இருந்திருக்கவேண்டும். அவ்வாறானதொரு உறவுநிலையே இந்தியாவின் கேந்திர நலன்களுக்கும் பாதுகாப்பாக இருந்திருக்க முடியும். ஆனால் தமிழர்களுக்குள் காலங்காலமாகவே உருவாகிக்

கொண்டிருக்கும் எட்டப்பர்கள் போலவே இந்திய தேசத்தில் உள்ள அதன் வெளியுறவு இராசதந்திர ஆலோசகர்களும் தமது தனிப்பட்ட மற்றும் சமூக பிரதேசவாத நிலைப்பாடுகளால் தமிழர்களுக்குக் கௌரவமான தீர்வு வருவதையோ அல்லது தனிநாடு உருவாவதையோ தடுத்துவருகிறார்கள்.

அன்று வெளிக்காட்டத் தொடங்கிய காந்திதேசத்தின் துரோக நாடகம் இன்றுவரை தொடர்கதையாகத் தொடர்கின்றது. ஈழத்தமிழர்களின் மீது ஏன் இந்தியாவிற்கு வெறுப்பு..? காரணம் கேட்டால், இராஜீவ்காந்தி படுகொலை தேசியம் பிராந்திய நலன் என காரணமில்லாத காரணங்களை அடுக்குவார்கள் இந்த காந்தியவாதிகள். இந்த போலிக் காந்தியவாதிகளுக்குத்தான் எமது அவலங்கள் புரியப்போவதில்லை.

தமிழீழம் என்ற கோரிக்கையையும் அதற்கான தமிழர்களின் நியாயமான போராட்டங்கள் தொடர்வதையும் காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு எப்போதுமே ஆதரிக்கப்போவதில்லை என்ற கசப்பான உண்மையை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அது உணரப்படும் பட்சத்தில்தான், எம்மீது படர்ந்திருக்கும் அறியாமை இருள் சிறிதாவது விலகும்.

அதனைப் புரிந்து கொள்ளாமல், தொடர்ந்தும் இந்தியா மனம்மாறும் என நம்பியிருப்போமானால், அன்று திலீபனை நாம் இழந்ததைப்போல் எதிர்காலத்தில் எம் இலட்சியங்களையும், நம் தாய் மண்ணையும் இழந்து நிரந்தரமான அகதிகளாகவே வாழ வேண்டிய இழிநிலைக்கு ஆளாவோம். இந்தியாவின் ஆதரவு தமிழர்களிற்கு கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் தற்போதைக்கு இல்லையென்பது உறுதியாகிவிட்ட நிலையில், தமிழர்கள் தமக்கு ஆதரவளிக்கக் கூடிய பிறநாடுகளின் ஆதரவினைத் திரட்டவேண்டியது அவசியமாகிறது.

இந்தவகையில், இவ்வளவு காலமாக தமிழர் விடயத்தில் பாராமுகமாக இருந்துவந்த அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தமிழர்களுக்கு சார்பாக ஆதரவளிக்கக்கூடியதாக மாறிவரும் சர்வதேச நிலைமாற்றங்கள் ஈழத் தமிழர்களுக்கு சாதகமாக அமையக்கூடும். இதனைச் சாதகமாக கையாளுவதன்மூலம், தமிழர்கள் தமது தாயக விடுதலைக்கான போராட்டப் படிமுறைகளை வெற்றியை நோக்கி முன்னகர்த்தக்கூடிய சாத்தியம் வலுப்பெறும்.

சிங்கள அரசோடு கூட்டுச்சேர்ந்து நிற்கும் இந்தியா, சீனா, ஈரான், ரஷ்யா போன்ற ஒருசில நாடுகளைத் தவிர பெரும்பாலான சர்வதேச நாடுகளின் நடவடிக்கைகள் இலங்கையரசிற்கு எதிராக மாறிவருவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு சாதகமான புறச்சூழ்நிலை உருவாகுவதற்கு, புலம்பெயர் தமிழர்கள் கடந்த காலங்களில் நடத்திய போராட்டங்களும், மக்களின் அவலங்கள் சர்வதேசத்தின்முன் வெளிக்கொணரப்பட்டமையுமே பெரிதும் உதவின.

அத்துடன் சிங்கள அரசின் எதேச்சைத்தனமான அதிகாரப்போக்கும், வல்லரசுத் தோரணையிலான அறிக்கைகளும் கூட சர்வதேச நாடுகளுக்கு இலங்கையரசின் மீது சினத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. புலம்பெயர் தேசத்தில் தமிழர்களால் தொடரப்பட்ட போராட்டங்கள் சர்வதேச மட்டத்தில் பல விடயங்களை சாதித்திருக்கின்றன என்பது தற்பொழுது மெல்ல மெல்ல சாதகமாக மாறிவரும் சர்வ தேச நிலைப்பாடுகளிலிருந்து தெரிகின்றது.

ஈழத்தமிழர் விடயத்தில் உலகில் செல்வாக்கு மிக்க நாடுகளான அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் தற்பொழுது கடைப்பிடித்துவரும் அணுகுமுறைகள் சிங்கள அரசிற்கு பெரும் அச்சத்தினைக் கொடுத்திருக்கின்றது. ஆனாலும் இந்தியாவும் சீனாவும் தனக்கு பக்கத்துணையாக இருக்கின்றது என்ற அசட்டுத் தைரியத்தில் சிங்களம் நிம்மதியடைகின்றது என்பதுவே உண்மை. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான பனிப்போர் என்றைக்கு உச்சநிலையை அடைகின்றதோ அன்றைக்கு இலங்கை இவற்றின் பூரண ஆதரவினை இழக்கும் சாத்தியக்கூறுகள் உருவாகும்.

இவைதான் தனது பக்கபலம் என்று நினைத்து திமிருடன் ஏனைய உலகநாடுகளை பகைத்துக்கொள்ளும் சிங்களம் இவற்றின் ஆதரவையும் இழந்து அநாதையாய் அந்தரிக்கப்போகும் நாள் வெகுதொலைவில் இல்லை. ஈழவிடுதலைப் போராட்டமானது தமிழ்மக்களின் கைகளிலேயே கையளிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதை பிரதானமாக கொண்டு நடத்தவேண்டிய பொறுப்பும் கடமையும் புலம்பெயர் தமிழ் மக்களையே சார்ந்திருக்கின்றது.

மூன்று தசாப்த காலமாக புலிகள் தமது ஆயுதரீதியிலான போராட்டத்தினை முன்னெடுத்த நிலையில், அவர்கள் இராணுவ வெற்றிகளைவிட தமிழர்கள் மத்தியில் விடுதலை தொடர்பாக புரட்சிகரமான எழுச்சியையே மிகவும் எதிர்பார்த்தார்கள். ஆனால், எங்களின் விடுதலைக்காக போராடியவர்கள் எங்களிடம் எதிர்பார்த்த ஆகக்குறைந்த எதிர்பார்ப்பைக்கூட நிறைவேற்றாதவர்களாக நாங்கள் இருந்தோம்.

அன்று திலீபன் மக்களிடம் வேண்டிக்கொண்டதும் அதைத்தான். ''மக்கள் புரட்சி'' என்ற நிலையை அன்றே நாம் அடைந்திருப்போமானால், இன்று நாம் விடுதலை பெற்று பல வருடங்கள் ஆகியிருந்திருக்கும். அப்படியில்லாவிட்டாலும் ஆகக்குறைந்தது, தமிழினத்தின் அழிவையாவது தடுத்திருந்திருக்கலாம். நடந்தவை நடந்து முடிந்ததாகவே இருக்கட்டும். இனிமேல் நடக்கப்போவதைப் பற்றி சிந்திப்போம். எமது விடுதலையென்பது எம்மிலேயே தங்கியுள்ளது. இவ்வளவுகாலமாய் அதை புலிகள் பெற்றுத்தருவார்கள் என்று சொல்லிச்சொல்லியே அனைத்துப் பொறுப்பையுமே அவர்களின் தலையில் சுமத்திவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தோம்.

பணத்தினை அள்ளி அள்ளி கொடுத்த நாங்கள் அவர்கள் எதிர்பார்த்த பக்கபலத்தினைக் கொடுக்கத் தவறிவிட்டோம். புலிகளை சர்வதேசம் தடை செய்தபோது, அதற்கும் எமக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்ற வகையில் அமைதியாக விலகியிருந்தோம். புலிகளையும் தமிழ்மக்களையும் சர்வ தேசம் வேறுபடுத்திப் பார்த்ததற்கும் அவர்களது போராட்டத்தினை பயங்கரவாதம் என முத்திரை குத்தியதற்கும் நாமே வழியமைத்தோம். அன்று நாங்கள் இழைத்த இந்தத் தவறுதான், இன்றைய அத்தனை அவலங்களுக்கும் காரணம்.

இனியாவது ஒவ்வொரு தனிமனிதரும் போராடத்தொடங்குவோம். விடுதலை என்பது ஒவ்வொரு தமிழனினதும் அவசியம் என்பதை உணர்வோம். ஒரு சிலரே முழுப்பாரத்தையும் தாங்கிக்கொள்ள மற்றவர்கள் வேடிக்கை பார்ப்பதை நிறுத்தி, அனைத்துத் தோள்களும் விடுதலைக்கான பாரத்தைச் சுமக்கட்டும். திலீபன் தேடிய மக்கள் புரட்சி என்பதும் இன்னமும் முழுதாக உருவாகவில்லை. சர்வ தேசத் தமிழர்களின் புரட்சி வெடித்தால், உலக நாடுகள் சிங்களத்திடம் இருந்து எமது மண்ணை நிச்சயமாக மீட்டுத்தரவேண்டிய அவசியம் உருவாகும். அதை உருவாக்க உழைப்பதே எமது பணி என திலீபனின் பாதங்களில் சத்தியம் செய்துகொள்வோம்.



# KB intercom

**CyberCafe,
Carte téléphonique,
Alimentation générale,
Kiosque, Cigarette,
Western Union,
Ticket Booking**

**WESTERN UNION**
**MONEY TRANSFER**

மிகக் குறைந்த
விலையில்
அனைத்து
நாடுகளுக்குமான
தொலைபேசி
அட்டைகள்!

**iEasyTravels**
www.ieasytravels.com



தொடர்புகளுக்கு:

உரிமையாளர்: U. KARTHIGESU

Av des Alpes 40, 1820 Montreux, Switzerland

Tel.: 021 961 27 16 Fax: 021 961 27 19 Natel: 079 681 56 44

**சங்கத் தமிழன்**
www.sangatamilan.com

# வில்லங்க விருதுகள்

வரைகலை: இரா. இலக்கியா





## மலர்தூவும் மாணிக்கம் விருது

முள்ளிவாய்க்கால் மண்ணின் அவலங்களை மக்கள் மறக்கப்போவதில்லை, மறக்கவும் முடியாதது அது... அதற்கும் மேலாய், சிறையில் வைத்து எமது சகோதரர்களை அடித்தே கொன்று, ஏனையவர்களை மிரட்டும் இராசாபக்ச நல்லூர் கந்தனுக்கு மலர் தூவினாராம். ( கடவுளுக்கு கண்ணில்லை எண்டுறது உணமைதானோ எண்டு பார்த்திருப்பாரோ..!) தமிழ்மன்னன் போதிதர்மனை சீனாக்காரன் தங்களுடைய மன்னன் எண்டு சொன்னமாதிரி, நல்லூர்க்கந்தனுக்கும் கெதில சீனாக்காரன் விலைபேசப்போறான். ( அதுக்குப் பதிலா அம்பாந்தோட்டையில ஏதும் கட்டிக் குடுக்காமலே விடப்போறான்..!) ஐயா... முள்ளிவாய்க்கால் கெதில முளைக்கும்.. அந்தநேரம் அம்பாந்தோட்டையில நாங்கள் வந்து மலர்தூவுவம்..!



## வாழைப்பழப் பிள்ளையான் விருது

கிழக்கு மாகாணம் எண்ட வாழைப்பழத்துக்குக் காவல் இருக்கிறார் பிள்ளையான் எண்ட குரங்கு. ஒரு பக்க த்தால சம்பந்தர் ஐயாவையும் வெருட்டிக்கொண்டு, மற்றப்பக்கத்தால கருணாவுக்கும் தலையை ஆட்டிக்கொண்டு, மகிந்தவின்ர இயக்கத்தில வெளிவரப்போற படத்துல உவர் தான் நாயகன். தேர்தல், அமைச்சர் பதவி எல்லாத்துக்கும் மேலால, காணமல் போன பிள்ளைகளைத் தேடிப் போன பெற்றோரை சுட்டுக் கலைச்ச கெட்டிக்காரனும் உவர் தான். (கடத்துறது உம்மட குலத்தொழில் எண்டு அதுகளுக்குத் தெரிஞ்ச படியால்தானே உம்மட்ட வந்திருக்குதுகள்) சும்மா இருக்கேக்கையே உந்த ஆட்டம் எண்டால் முதலமைச்சர் பதவி கிடைச்சால் சொல்லவே வேணும்..?



## பாசக்கார மீசைக்காரன் விருது

தேசியத்தலைவரைச் சந்தித்தபின், ஈழத்துக்கும் ஆதரவாகக் குரல்கொடுத்துவிட்டு, தி.மு.க வின் கொலைகாரக்கூட்டத்தோடு கூத்தடிக்கும் திருமா, டெசோவிற்கு உயிர்கொடுக்க வேண்டும் என்று மறைமுகமாகக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நேராச் சொல்லியிருந்தா நெஞ்சிலேயே மிதிச்சிருப்பார் சீமான்) இராஜபக்சவின் விருந்துக்கும் சென்று, அதற்கும் ஒரு உருகவைக்கும் காரணம் கூறிய பெருந்தகை..( நம்ம மக்களைப் பார்க்க இதைவிட்டா எனக்கு எப்பிடிண்ணே வேற சந்தர்ப்பம் கிடைக்கும்..?) இப்போது நீலகிரியில் பயிற்சி பெறும் ஸ்ரீலங்கா இராணுவத்தை வெளியேற்றுவதற்குப் போராட்டமாம். ( ஐய்யா சாமி... நம்மள வைச்சுக் காமெடி கீமெடி ஏதும் பண்ணலையே...?)

## குல்லாத்தொப்பிக் கன்னா விருது



ஆகா ஓகோ உண்ணாவிரதம், கறுப்புப்பணத்திற்கெதிரான போராட்டம், இந்தியன் தாத்தாவின் மிரட்டல் அலப்பறை எல்லாம் விட்டதன் பின்னர்.., ராகுல் வந்தால் மட்டுமே போராட்டத்தை நிறுத்துவேன் என்று அறிக்கை விட்டது குல்லா. (அப்பவே நம்மளுக்குச் சந்தேகம் சாமி..) சரி.., தாத்தாவுக்குத் தாய்நாட்டின் மேல் பாசமாக்கும் என்று நினைத்தால், காங்கிரஸ் மட்டுமே கடமை, கண்ணியத்தின் வெளிப்பாடு என்று ஒரு பெரிய குண்டைத்தூக்கிப்போட்டவுடன் விழித்துக்கொண்டது மக்கள் மட்டுமல்ல, ஏனைய கட்சிகளும் தான். தாத்தா பண்ணின கூத்துக்குப் பின்னாடி காங்கிரஸ் இருக்கும் என்று நம்பத்தொடங்கிய தறுவாயில்,,, விட்டாரே அறிக்கை....''அரசியலுக்கு வரத் தயார். (அது எப்பிடி தாத்தா ... எல்லாரும் கடைசில இதையே சொல்லுறாங்க..?) அன்னா ஹசாரே..., இது என்னா சாரே..???

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

## என்.எஸ். ஜுவலரி

**Neugasse 58**
**8005 Zürich**
**Switzerland**

Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com



தாலி மற்றும்
பொன்னுருக்குதல்
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்!

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
நவீன உயர்தர டிசைன்களில்
நகைகளும், திருமண ஆபரணங்கள்,
ஓடர்நகைகள், திருத்த வேலைகள்
யாவும் செய்து கொடுக்கப்படும்.

தாலிக்குப் பொன்னுருக்குதல், காது,
மூக்குக்குத்துதல் போன்ற நல்ல
காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருடமும் தை மாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100CHF என 12 மாதம் 1200CHF. இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.

# மண்ணில் வீழா மழைத்துளிகள்...



## தமிழ் அரசியல்.

அரிசியிற் தொடங்கி
அலங்கோலப்பட்டு
வேங்கைகள் வரவுடன்
வீறுகொண்டெழுந்தது
தமிழீழத் தமிழ் அரசியல்!

இலவச போதையில்
இருந்ததும் கெட்டு
புலிக்கு அடிமாட்டு
விலைபேசும்
தமிழகத் தமிழ் அரசியல்!

-சிவம் அமுதசிவம்



## பெண் மனம்!

ஆண்கள் ஆழம் காணத்
துடித்தாலும் அங்கே
இருக்கும் சோகம்
மட்டும் தெரிவதில்லை!

-பாக்கியம்



பூமித்தாய் குழந்தையாகி
காற்றுக்கு கருவாகி
பசுமைக்கு உறவாகி
வசந்தத்தை உருவாக்கும்
களைப்புக்கு இளைப்பாறும் மரம் இன்றேல்
மண்ணில் வீழா மழைத்துளிகள்..

-குமரேஸ்வரன்



## தேர்தல்கள்!

அரசியல்வாதிகள்
வாயில் கிடைத்த
காய்ந்த எலும்பு
நாய் அறியும்
அதன் சுவையை!

-பரமு

## நான்தான் தமிழன்!

எனது பெயர்
தமிழ் இல்லை
ஏன் என்றால் ?
நான் ஒரு தமிழன்!
எனது வாய் மறந்தும்
தமிழ் மொழி பேசாது
ஏன் என்றால் நான்
அது என் தாய் மொழி!

-கருமி

"மண்ணில் வீழா மழைத்துளிகள்" என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.
tMedia Network - PO BOX 4153, 59037 Hamm - Germany - eMail: editor@akram.eu

# அகரக் கவிக்களம்...

தொகுப்பு: தமிழ்விழி



## மரம்

மனிதருக்கெல்லாம் பாடமாகிறது
மரம்....,
கிளைகள் மேற் செல்ல
வேர்கள் கீழ்ச் செல்ல
ஒருமித்திருக்கிறது வாழ்வு...!



## நாளை சந்திக்கும் வரை..!

செய்தி வாசிக்கும்
செல்வி கூறுகிறாள்..
நாளை சந்திக்கும் வரை.....
அதுவரை
உயிர்வாழ்தல் உறுதியா..?



## கயிறு..

கட்டி வைப்பதற்குப்
பயன்படும் இது
அவிழ்க்கவும் செய்கிறது
சிலவேளை
உயிர்களை....!



## கடமை

யாரும் கேட்காமல்
உதிக்கும் சூரியனும்
தானாய் வந்து
தாறுகின்ற மழையும்
நன்றிக்காய் ஏங்குவதில்லை,
நம்மிடம்....!



## மனிதனும் மலர்களும்

நறுமணத்திற்காய் மலர்கள்
பூமியில் படைப்பு..
பூமியில் அசுத்தம்
மனிதனின் திணிப்பு...



சிறிலங்கா அரசாங்கத்தினால் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட விரும்பினால் மட்டக்களப்புக்குச் செல்லுங்கள் எனப் பரவலாகத் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், வீதிவிபத்துக்களையும் அதன் பாரதூரமான விளைவுகளையும் காண விரும்பினாலும் மட்டக்களப்பிற்கே செல்ல வேண்டும் எனக் கூறும் நிலை உருவாகியுள்ளது. இலங்கைத் தீவு முழுவதுமே வீதி விபத்துக்களும், அதன் காரணமாக உயிரிழப்போரின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து வருகின்ற போதிலும் கிழக்கு மாகாணத்தில், அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக வீதிகளில் பொதுமக்கள் கால்பதிக்கவே அச்சப்படும் ஒரு சூழ்நிலை நிலவி வருகின்றது.

நடப்பு வருடத்தில் மாத்திரம், மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை வீதி விபத்துக்களால் 30க்கும் அதி;கமானோர் உயிரிழந்துள்ளாதாக மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் லால் செணவிரட்ன தெரிவித்திருக்கிறார். அதே நேரம், கடந்த 2009 ஆம் ஆண்டு 48 பேரும், 2010 ஆம் ஆண்டு 54 பேரும், 2011ஆம் ஆண்டு 56 பேருமாக மூன்று வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி விபத்துக்களினால் 158 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்தோர் எண்ணிக்கை இதைப்போன்று பலமடங்கு.

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போது, நிந்தவூர் அட்டப்பள்ளம் பகுதியில் இரவு 8.35 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். அக்கரைப்பற்றிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேரூந்தும் அக்கரைப்பற்று நோக்கிச்சென்ற முச்சக்கரவண்டியும் நேருக்கு நேராக மோதியதாலேயே இந்த உயிரிழப்புச் சம்பவம் இடம்பெற்றது. இறந்தவர்களில் மூன்று பெண்கள், ஒரு சிறுவன், ஒரு சிறுமி மற்றும் முச்சக்கரவண்டிச் சாரதி ஆகியோர் அடங்குவர்.



-இலட்சுமணன்-

மறுதினம், காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் பேரூந்து ஒன்று பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஜூன் மாத ஆரம்பத்தில் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் தெய்வநாயகம் சியாம்பவன் (வயது 16) என்ற மாணவன் பலியாகியிருந்தான்.

மஞ்சள் கடவையை கடக்க முற்பட்ட இம்மாணவன் மீது வாகனமொன்று மோதி இவ்விபத்து சம்பவித்தது. ஒரு வாகனத்தை மற்றுமொரு வாகனம் முந்திச்செல்ல முற்பட்டபோதே இவ்விபத்து சம்பவித்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

மே மாதம் 22ஆம் திகதி சத்துருக்கொண்டான் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் தனது மனைவிக்கு இரவு உணவு கொடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவரும் அவரது உறவினரும் சம்பவ இடத்திலேயே மரணமானார்கள். மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இவர்கள் மீது மட்டக்களப்பில் இருந்து ஓட்டமாவடி நோக்கி அதி வேகமாகச் சென்றுகொண்டிருந்த கார் சத்துருக்கொண்டான் வளைவிலே மோதியுள்ளது.

இவ்வாறு பல சம்பவங்களைக் கூற முடியும். பெரும்பாலான விபத்துக்களில் வாகனங்களின் கட்டுக் கடங்காத வேகமும், போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பதில் உள்ள அலட்சியமுமே காரணமென அறிய முடிகின்றது. அது மாத்திரமன்றி, காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவு உத்தியோகத்தர்கள் மத்தியில் நிலவும் ஊழலும் ஒரு பிரதான காரணமாகத் தெரிவிக்கப் படுகின்றது.



# மட்டக்களப்பில் தொடரும் வீதிவிபத்துக்கள். தடுப்பது எவ்வாறு?

தமக்கு வழங்கப்பட்ட வீதி ஒழுங்கைப் பாது காக்கும் வேலைகளில் காவல்துறையினர் மனப்பூர்வமாக ஈடுபடுவார்களானால் இவ்வளவு பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்குமா என்ற கேள்வி இந்த இடத்தில் எழுப்பப் படுகின்றது. அவர்களைப்; பொறுத்தவரையில், யாருக்கு அபராதம், விதிக்கலாம், யாரை நீதிமன்றத்திற்கு அனுப்பலாம் எனச் சிந்திக்கின்றார்களே தவிர வீதிவிபத்துக்களைத் தடுக்க உண்மையில் என்ன செய்யப்பட வேண்டும் என்பதில் அக்கறை அற்றவர்களாகவே உள்ளனர்.

யுத்த காலகட்டத்தில் தமிழ் மக்களைக் கொலைசெய்து தனது இனவாதக் கொள்கையை அமுல்படுத்திய சிங்களம், வீதிவிபத்துக்கள் விடயத்தில் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தனது இலக்கை வேறொரு விதத்தில் நிறைவேற்றி வருகின்றதோ எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது.

விபத்துக்கள் நடைபெற்ற பின்னர், மிகக் கடுமையாக நடவடிக்கைகளை எடுக்கும் காவல்துறையினர், வீதி ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதிலும் மிகவும் கவனமாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்பதே பொது மக்களது ஆதங்கமாக இருக்கிறது.

விபத்து அபாயம் உள்ள பகுதிகள் எனக் காவல்துறையினரால் சில இடங்கள் அடையாளம் காணப்பட்டாலும், அந்த இடத்தில் வீதி ஒழுங்கை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென்றால் அது வெறுமனே ஒழுங்கை மீறுபவர்களை நிறுத்தி அவர்களுக்கு வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டு துண்டைக்கிழித்து தபால் கந்தோரில் பணத்தைக் கட்டிவிட்டு வா அல்லது நீதிமன்றம் இத்தனையாம் திகதி என்று கொடுப்பது வழமையாகி இருக்கிறது.

அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற சம்பவங்கள் சிலவற்றினை இந்த இடத்தில் சுட்டிக்காட்டியாக வேண்டும். மட்டக்களப்பின் பிரதான வீதிகள் வேக நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட்டது முதல் விபத்துக்கள் அதிகரித்திருக்கின்றன என்பது உண்மை.

மட்டக்களப்பின் முக்கிய பகுதிகள் இரண்டில் யு வளைவுத்தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடைக்கான அடையாளம் குறிப்பிட்ட இடங்களில் வைக்கப்பட்டு ஒரு சில மணிநேரத்தில் இருந்து வீதிப் போக்குவரத்துப் காவல்துறையினர் வீதியால் போனவர்களை நிறுத்தி துண்டெழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தனர். குறுகிய நேரத்தில் அந்தப் காவல்துறையினர் வசமிருந்த ஒரு புத்தகம் முடிந்தது. அவ்வளவு வேகமாக தண்டம் விதிப்பதையே அவர்கள் செய்து கொண்டிருந்தார்.

எவரும் தம்மை எந்தவிதமான கேள்வியும் கேட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்துடனேயே காவல்துறையினர் செயற்படுகின்றனர். நிறுத்தப்படுபவர் எந்தப் பேச்சும் பேசாது கிழித்துக் கொடுக்கும் துண்டை எடுத்துக் கொண்டு நீதிமன்றத்துக்கோ அல்லது தபால் நிலையத்துக்கோ செல்லவேண்டும் என்றே எண்ணம் கொண்டிருக்கின்றனர்.

தென் கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் வீதி ஒழுங்கமைப்பு சிறப்பான தாகவே காணப்படுகின்றது. கார்ப்பட் வீதி,

தார் வீதி, கொங்கிரீட் வீதி என பிரதான வீதிகள் தொடக்கம் கிராமப் புறங்களில் உள்ள சிறு வீதிகள் வரை புதிதாக அமைக்கப்படுகின்றன.

இவ்வாறு பாதைகள் அபிவிருத்தி செய்யப்படுவதன் நோக்கம் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தி, நேரத்தை மீதப்படுத்தி ஆரோக்கியமான போக்குவரத்து சேவையை மக்களுக்கு வழங்குவதாகும். இன்றைய சூழலில் வாகனங்கள் இன்றியமையாததொன்றாகும். இருப்பினும் அதற்கு மாற்றமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து காணப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும். வீதி விபத்துக்கள் இன்று ஒரு சமூகப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்களால் தினசரி சராசரியாக 5 தொடக்கம் 7 வரையிலானவர்கள் இலங்கையில் மரணிக்கின்றனர் எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

காவல்துறைத் தகவலின் படி ஏறத்தாள 40,000 வீதி விபத்துக்கள் கடந்த வருடம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கிறது. இவற்றில் 2,664 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு வீதி விபத்துக்களில் பாதிக்கப்படுவோரில் 2/3 வீதமானோர் பாதசாரிகளாகக் காணப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும். 2006 ஆம் ஆண்டு 33,757 ஆகக் காணப்பட்ட வீதி விபத்துக்கள் 2011 இல் 39,700 ஆக அதிகரிள்ளமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.



இலங்கையில் வருடம் ஒன்றிற்கு 500,000 புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றது. 2002இல் இரண்டு மில்லியனாக இருந்த வாகனப் பாவனையானது 2010 இல் 4 மில்லியனாக, இரு மடங்கால் அதிகரித்துள்ளது.



அதிகமான வீதி விபத்துக்கள் இடம்பெறுவதற்கான பிரதான காரணம் கவனயீனமாக வாகனம் ஓட்டுவதாகும் எனத் தரவுகள் கூறுகின்றன. சாரதிகள் வீதிச் சமிக்ஞைகளை கவனத்திற் கொள்ளாமல் வாகனம் ஓட்டுவதும், வீதியின் வேக அளவு ஒழுங்கு முறைகளைப் பேணாமல் வாகனங்களைச் செலுத்துவதும் அதிகமான விபத்துக்களுக்குக் காரணமாகின்றன.



வாகனத்தின் பிரதான மின்குமிழைச் சரிவான பாதையில் எரியவிடாமை, மோசமான வாகனப் பராமரிப்பு, சமிக்ஞை மின்குமிழ்களைச் சரியாக பயன்படுத்தாமை, போதைவஸ்த்து பாவித்துக் கொண்டும், மதுபானம் அருந்திக் கொண்டும் வாகனம் செலுத்துவது, கைத்தொலைபேசியில் உரையாடிய வண்ணம், பாட்டுக் கேட்டுடவாறு அல்லது உணவு உண்டவண்ணம் செலுத்துவது, ஆகிய காரணங்களால் கவனம் திசைதிருப்பப்பட்டு வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அதே நேரம், சில பேரூந்துகள் - குறிப்பாக தனியார் பேரூந்துகள் - பயணிகளை ஏற்றுவதற்காக வேகமாக ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்படுவதனாலும் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. முக்கியமாக பாதசாரிகள் பெரும்பாலும் வீதி ஒழுங்குகளைக் கருத்திற் கொள்ளாது செயற்படுகின்றனர்.

சாரதிகள் சார்பில், போதுமான தூக்கம் இன்மை, ஓய்வின்றி நெடுந்தூரம் பயணிப்பது ஆகியவை விபத்துக்களுக்கு காரணமாகிறது. குறிப்பாக இலங்கையில் தூரப் பிரதேசங்களில் இருந்து கொழும்பு வரும் பேரூந்துச் சாரதிகள் இரவு முழுவதும் கண் விழித்து காலை கொழும்பை வந்தடைந்து பகல் பொழுதில் சிறிது தூங்கி, ஓய்வு எடுத்து மீண்டும் திரும்பிச் செல்கின்றனர். இவ்வாறு போதிய தூக்கம், ஓய்வு இன்றி வாகனத்தைச் செலுத்துவது விபத்துக்களுக்கு காரணமாக அமைகிறது.

அத்துடன், போலியான சாரதி அனுமதி பத்திரங்கள், காவல்துறையினரின் கையூட்டு வாங்கும் செயற்பாடு என்பவையும் விபத்துக்களுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

அந்தவகையில், கிழக்கினைப் பொறுத்தவரையில் என்றில்லாமல் பொதுவாகவே வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்கான பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் நல்லது. பாடசாலைக் கல்வியோடு இணைந்து வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பற்றிய கல்வியை ஆரம்பத்திலிருந்தே மாணவர்களுக்கு வழங்கல், வீதி ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வுத் திட்டங்களை பொது மக்களுக்கும் அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்களுக்கும் நடைமுறைப்படுத்தல், சாரதிகள் பாதசாரிகள் போன்றோருக்கு விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தல், வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை கடுமையாக்கல், பொருத்தமில்லாத வாகனங்களை அப்புறப்படுத்தல், வாகன தரக்கட்டுப்பாட்டு பரீட்சைகளை புதுப்பித்தலும் மேம்படுத்தலும், மதுபானம் அருந்திக் கொண்டு வாகனம் செலுத்துவதைத் தவிர்த்தல், தலைக் காப்பு கவச த்தை அணிதல் என பலவற்றைச் சொல்லலாம்.

அனைவருக்கும் பொதுவான வீதியைப் பொறுப்புடனும், அவதானத்துடனும் அனைவரும் பாவிப்பார்களேயானால் வீதி விபத்துக்களைப் பெருமளவில் தவிர்க்கலாம் என்பதே உண்மை.

# இவள் போல் எத்தனை தெய்வங்களை நாம் பலி கொடுப்போம்?



*தாய் மண்ணுக்கும் தமிழர் எமது மானத்துக்குமாய் 15 வருடங்கள் புலியாகிப் போராடிய தேவதை இவள். 1999ல் களமாடிக் காயம் பட்டுப் பாதி இயக்க சக்தி இழந்த நிலையிலும் புலிகளின் மருத்துவப் பிரிவில் சேவையாற்றி கைதாகிச் சொல்ல முடியாத சித்திரவதைப் பட்டு விடுதலை(?) ஆன பின்னரும் சிங்கள இராணுவத்தின் தினவுக்குத் தீனியாக மறுத்து தானே தனக்குத் தீ மூட்டித் தீயோடு சங்கமித்துத் தமிழ் மண்ணை விட்டுப் போனவள் சுபோதினி சிவலிங்கம் இவள் போல் இன்னும் எத்தனை இதய தெய்வங்களை ஈழம் இழக்கப் போகிறது.*

*நிலத்தில் அரசியல் வியாபாரம் நடத்தும் முன்னாள் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளும் புலத்தில் புலிகள் எனக் கூறித் தமக்குள் முட்டி மோதும் தம்பிகளும் இக்கொடுமைக்கு என்ன தீர்வு வைத்திருக்கிறார்கள்?*

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in



# தனி ஈழம் கேட்கக்கூடாது மதுரையில் சுஸ்மா சுவராஜ் கண்டிப்பு!

*தமிழகத்திலிருந்து சீதாராமன்.*

இலங்கைக்கு நிலைமையை நேரில் கண்டறியும் இந்தியப் பாராளுமன்றக் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்றவர் எதிர்க்கட்சித் தலைவியான சுஸ்மா சுவராஜ். அவருக்கு ஏற்கனவே இலண்டனில் பிரித்தானியப் பேரவையும் உலகத் தலைவர் பேரவையும் நடத்திய சந்திப்புகளின் அனுபவம் உண்டு. அவை பற்றிய படங்களும் செய்திகளும் வெளிவந்திருந்தன. எனவே அவரது கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சிக்கு வரும் என்ற நிலையில் அவரிடமிருந்து அதிக அளவு ஆதரவும் இந்திய அரசின் வெளி உறவுக் கொள்கையில் பாரிய திருப்பமும் ஏற்படும் என்ற கனவில் மிதந்தது ஈழத் தமிழ் இனம்.

அப்படியானவர் இந்தியப் பாராளுமன்றக் குழுவின் தலைவராக இலங்கை சென்ற போது ஒரு நேர்மையும் நிதானமும் நீதியும் கொண்ட அறிக்கையை அவரிடம் எதிர்பார்த்தோம். ஆனால் அங்கு சென்ற பின்னர் அவரோடு சென்ற ஏனைய உறுப்பினரோடு நிலவரங்களைக் கண்டறியாது தனியாக செயற்பட்டதோடு ஏனையோர் புறக்கணித்த நிலையில் தாமே தனித்து மகிந்தரின் இரவு விருந்தில் பங்கேற்றார்.

குழுவின் ஏனைய உறுப்பினர் வேற்றுக் கட்சியினர் என்பதால் அரசியல் கருத்து முரண்களைக் காரணம் காட்டி அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம். அதே வேளையில் தாம் ஒரு பொறுப்பான எதிர்க் கட்சித் தலைவி தமக்கு ராஜதந்திர நடைமுறைகளையும் நட்புறவையும் பேண வேண்டிய கடப்பாடு உண்டு என்பதால் விருந்தை ஏற்பதே கடமையும் கண்ணியமும் என்று நினைத்திருந்தால் அதனைப் பெருங் குணமாக ஏற்போமே அல்லாது குறையாக எடுக்கவும் மாட்டோம்.

எப்படியோ மகிந்தரின் விருந்தை ஏற்று இருநாடுகளின் கண்ணியத்தையும் காப்பாற்றினார் என்பதில் அவரது பெருந்தன்மை பளிச்சிட்டது. அதே நேரத்தில் அவ்விருந்தில் தமது குழுவினரையும் ஏற்கச் செய்து சேர்ந்து போயிருந்தால் அவருடைய தலைமைக்கும் குழுவின் கண்ணியத்துக்கும் பெருமையாக இருந்திருக்கும்.அவ்வாறு அவர் நடக்கத் தவறியதை அவரது தலைமையின் குறையாகவே நினைக்கிறோம்.

ஆனால் அவர் மதுரையில் நடந்த பாரதிய ஜனதாக்கட்சி மாநாட்டில் தமிழீழத்துக்கு எதிராகக் கருத்துகளைத் தெரிவித்ததும் அல்லாமல் தமிழக அரசியல் கட்சிகளிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறேன், அங்குள்ள தமிழர்கள், தமிழ்க் கட்சிகள் அனைவரும் உரிமைகளுடன் கூடிய ஒன்றுபட்ட இலங்கையே தேவை என்று கூறும் போது நீங்கள் மட்டும் ஏன் தனி ஈழம் தேவை என்கிறீர்கள்? அதுதான் புரியவில்லை. தனி ஈழக் கோரிக்கையை பா.ஜ.க.ஆதரிக்கவில்லை எனவும் பேசி உள்ளார்.

இலண்டனுக்கும் கொழும்புக்கும் இடையில் பல்லாயிரம் மைல் இடைவெளி உண்டென்பது எமக்குத் தெரியும். ஆனால் சுஸ்மாவின் இதயத்திலும் கருத்திலும் இடத்துக்கு இடம் இத்தனை பாரிய மாறுதல் இயல்பு என்பதை இவரது பேச்சில் தெரிகிறது. அவருடைய கருத்துச் சுதந்திரத்தை நாம் மதிக்கிறோம். ஆனால் அவற்றை ஏற்பதில் சில குறைபாடுகள் நமக்குத் தெரிகிறது.

இலண்டனில் உள்ள தமிழர் தரப்பின் கருத்து என்னவாக இருக்கும் என்பது எமக்குத் தெரியும். எனவே அவர் அதுபற்றிச் சொல்லாவிட்டாலும் அவர்களும் தனித் தமிழ் ஈழத்துக்கு எதிரான கருத்து உடையவர்கள் என அவர் கருதுவதானால் அதனை அவர் கூறாது விட்டது ஏன்? சரி இலங்கையில் உள்ள தமிழ் மக்களிடம் பேசி அறிந்தார் என அவர் கூறினாலும் அந்த மக்கள் என்ன மாதிரியான மன நெருக்கடிக்குள் வாழ்கிறார்கள் என்பதும் அங்கு கருத்துச் சுதந்திரம் முழுமையாக மறுக்கப்பட்டு உள்ளது என்பதும் உலகுக்கே தெரியும். அந்த உண்மை சுஸ்மாவுக்குத் தெரியாமல் இருந்தால் அது எமது தவறு அல்ல. ஆனால் அவ்வாறான தவறான புரிதலில் அவர் தெரிவித்த கருத்துகளிலே அடிப்படையில் உண்மை இல்லை என்பதே எமது வாதம்.

த.தே.கூ. தலைவர் சம்பந்தனைத் தான் நேரில் சந்தித்தபோது ஐக்கிய இலங்கையில்தான் தமிழர்கள் இருக்க விரும்புகிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்கிறார். மேலும் நேர்மையான அரசியல் தீர்வுதான் எங்களுக்குத் தேவை என்றும் அவர் வலியுறுத்தினார். நாமும் இதையேதான் இந்திரா காந்தி முதல் இன்றுவரை இலங்கை இந்திய அரசுகளைக் கேட்டு வருகிறோம். இரண்டு அரசுகளுமே எமக்கு நேர்மையான சிங்களவர்களுக்கு இணையான சம உரிமைகள் கொண்ட கௌரவமான வாழ்வைத் தமிழருக்கு உறுதிப்படுத்தும் அதிகாரப் பகிர்வைத் தரமறுத்து வருகின்றன.

எமக்கான தீர்வை ராஜீவ் காந்தி ஜே.ஆரோடு ஒப்பந்தம் போட்டு எமக்கு நேர்மையான தீர்வைத் தராது அரை குறை அடிமைவாழ்வை எம்மீது திணித்தால் அது ஜனநாயகமா? இலங்கையில் அதன் பூர்வீகக் குடிகளான தமிழரை சிங்களம் அடிமைப் படுத்துவதுதான் அதன் ஒருமைப்பாடும் இறையாண்மையுமா? தமிழனுக்கு இல்லாத இறையாண்மை சிங்களவனுக்கு மட்டும் எப்படி வந்தது? தமிழ் மக்களின் பிரதேசங்களுக்கு மறுக்கப்பட்டு வரும் ஒருமைப்பாடு எப்படிச் சிங்கள தேசத்துக்குப் பொருந்தும்?

இந்தியாவும் இலங்கையும் தேசிய ஒருமைப்பாடும் இறையாண்மையும் பற்றிப் பேச வேண்டுமாயின் தமிழ் ஈழத்தின் பிரதேச ஒருமைப்பாடும் தமிழரின் இறையாண்மையும் ஏற்கப்பட வேண்டும். ஜனநாயகம் பற்றிப் பேசுவதாயின் அதில் தமிழரும் தமிழர் பிரதேசமும் சம உரிமை கொண்டு வாழும் நிலை உருவாக்க முன்வர வேண்டும்.

பா.ஜ.க. வின் அரசியல் மற்றும் தனித் தமிழீழம் தொடர்பான கொள்கை பற்றிப் பேசும் தகுதியும் தராதரமும் அவருக்கு இருப்பதை ஏற்கிறோம். எனவே அக்கட்சியின் கொள்கையாக அவர் எதனை அறிவித்தாலும் அது கட்சியின் அதிகார முடிவாக இல்லாமல் போனாலும் நாம் ஏற்கத் தயாராக உள்ளோம். ஆனால் இன அழிப்புக்குள் இராணுவ அடக்குமுறைக்குள் இருக்கும் மக்களின் கருத்தாக யார் எதனைச் சொன்னாலும் அதில் உண்மை இருக்கமுடியாது. எனவே சுஸ்மா சுவராஜ் மகிந்தரின் விருந்தை ரசிக்கலாம் ஆனால் அவரது சிந்தனையை தமிழ் ஈழ மக்களின் கருத்தாக விற்பனை செய்ய முற்படக் கூடாது. அத் தகைய செயற்பாடு ஜனநாயக அரசியலுமல்ல.

தமிழகத் தமிழனின் கண்களை மட்டுமல்ல உலகத் தமிழனின், ஏன் உலக மக்களின் கண்களையே கூட முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு விழிக்கச் செய்துவிட்டது. இந்தியக் காங்கிரஸ் கட்சிக்கும் அதன் பங்காளிகளுக்கும் இமய மலைபோல் உயர்ந்து நிற்கும் ஊழல்கள் கண்களைக் குருடாக்கி விட்டன. அது போன்ற பார்வைக் கோளாறு பா.ஜ.க.வுக்கும் இருந்தால் சுஸ்மா மட்டும் எப்படிச் சரியாகப் பார்க்க முடியும்?

கோளாறு தனித் தமிழ் ஈழம் கோரும் தமிழ் மக்களிடம் அல்ல அதனை மறுக்கும் சுஸ்மா போன்றோரின் பேச்சிலும் நினைப்பிலும்தான்.






# கடலில் மூழ்கடிக்கப்படும் ஈழத் தமிழ் மக்கள் !

அகரம் ஜூன்- ஜூலை இதழில் அவுஸ்திரேலியச் சிறையில் எமது உறவுகளின் நிலை பற்றியும் அதனைக் கேட்பாரில்லையா? என்ற தலைப்பில் வெளியான கட்டுரையைத் தொடர்ந்து மேலும் சில தகவல்கள் எமது கவனத்தை வேறு திசையிலும் பார்க்க வைத்துள்ளது. ஆகஸ்டு மாதம் 4வது வாரத்தில் தமிழ் தொலைக்காட்சியொன்று சிறப்புச் செய்திக் காட்சியுடன் விவரணம் செய்து இக் கொடுமைக்கு முக்கியம் கொடுத்து ஏற்ற நடவடிக்கைக்கு வழி செய்துள்ளமை கண்டு அகரம் பாராட்டி வரவேற்கிறது. அந்த நிகழ்ச்சியும் எமது இந்தக் கட்டுரைக்குப் பலமான பங்களிப்பைச் செய்துள்ளது எனவும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

அண்மையில் இலங்கை அரசு வெளி நாடுகளில் வாழும் ஈழத் தமிழ் அகதிகளின் இலங்கைக் குடியுரிமையை இல்லாது ஒழிக்கச் சட்டம் இயற்றுவதாகத் தெரிகிறது. இதன் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்காது அகதிகளாக வெளிநாடுகள் சென்றுவிட்ட தமிழ் மக்களின் தாய் நாட்டின் மீதுள்ள உரிமையை வலிந்து பறிக்கும் நோக்கம் வெளியாகிறது.

1956 முதலே தமிழ் மக்களை கடலிலே தள்ளிவிட் டால் இலங்கைத் தீவு முழுவதும் சிங்களத்தின் சொந்தமாகிவிடும் என்ற கருத்து சிங்கள மக்க ளிடையே பரப்பப் பட்டு வந்துள்ளது. இன்று ஆட்சி அதிகாரத்தில் உள்ள சிங்களவர்கள் இக்காலப் பகுதியில் வளர்ந்து சிங்கள அரசி ன் கல்விப் பாடத் திட்டத்தின் கீழ் தமிழ் இன வெறியைக் கற்று வந்தவர்களே. அப்போது கல்வி அமைச்சராக இருந்தவர் பதியுதீன் மகமுத். தமிழ் மாணவருக்கான வெட்டுப்புள்ளித் திட்டத்தின் பிதாமகரும் அவரே.

இலங்கை ஒரு ஆரிய சிங்களப் பௌத்த நாடு என்ற அரசமைப்பை 1972ல் ஸ்ரீமாவின் அரசு உருவாக்கியதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதம் படிப்படியாக வளர்ந்து முள்ளி வாய்க்காலில் புலிகளையும் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழ்ப் பொது மக்களை அழித்ததோடு முக்கால் வெற்றியைக் கண்டது.

கடந்த 3 ஆண்டுகளாக முழு வெற்றியை அடையும் பொருட்டு தமிழர் நிலப் பறிப்பு, ஆட் கடத்தல், கொலைகள், பெண்கள் சிறுவர் மீதான பலாத்காரம், பாதுகாப்பின்மை என்பவற்றின் மூலம் தமிழரின் குடிப்பரம்பல் சிதைக்கப்பட்டு தாய் நிலத்திலேயே சிறுபான்மை ஆக்கப்படும் நடவடிக்கைகள் மும்முரமாக நிறைவேறி வருகின்றன.

இவைகளும் ஒரு இனஅழிப்புச் செயற்பாட்டின் வடிவங்களே என உணரமறுக்கும் அரசியல் தலைமையாக தமிழர் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. அவ்வாறு உணரப்பட்டிருந்தால் அவர்களின் அரசியல் செயற்பாடு இலங்கை அரசுக்கு எதிராகவும் தமிழ் மக்களின் விடிவை நோக்கியும் அவர்களது அரசியல் செல்நெறி சென்றிருக்கும்.

அவ்வாறு செயற்பட்டிருந்தால் போர் அழிவுகளில் சிக்கித் தவித்த தமிழ் மக்களின் வாழ்வைச் சீராக்குவது ஒன்றையே மகிந்தர் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப் பட்டிருக்கும். த.தே.கூ. தமிழ் மக்களுக்கான அரசியலைச் செய்யாமல் இந்திய அரசின் விருப்புக்கு சரத் பொன்சேகாவை அதிபராக்கி அரைப் பணத்துத் தாலியோடு கலியாணத்தை முடித்துவிடலாம் என நினைத்துச் செயற்பட்டனர்.

அதனால் புருசனைச் சுற்றி வந்து பிள்ளையைப் பெற நினைக்காமல் அரச மரத்தைச் சுற்றிச் சுற்றி அடி வயிற்றைத்தடவிப் பிள்ளை இருக்கா எனத்தவிக்கும் மலடி போல் மகிந்தர் என்ற அரச மரத்தைச் சுற்றிய

படியே தமிழ் மக்களுக்கு த.தே.கூ. பொய் கூறி அரசியல் நடத்தி வருகின்றது.

ஆனால் இவர்களின் இழி நிலை அரசியலால் தமிழ் மக்கள் நாட்டை விட்டு ஓடினால் போதும் என்ற மன நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். எனவேதான் இந்தியக் கரைகளில் இருந்தும் இலங்கைக் கரைகளில் இருந்தும் ஆயிரக் கணக்கில் இலங்கைத் தமிழ் அகதிகள் ஆபத்தான கடல்வழிப் படகுப் பயணங்களை தமது காணி வீடு நகைகளை விற்று இலட்சம் இலட்சமாகச் செலவு செய்து நாட்டை விட்டுப் போகின்றனர்.

இத்தகைய ஒன்றைத்தான் சிங்களம் நெடுநாட்களாகத் தனது கனவாகக் கொண்டு அரசியல் நடத்தியது. அதற்கு த.தே.கூ. மிக நன்றாக உதவி வருகிறது. ஆனால் இப்படி வெளியேறும் மக்களின் முடிவு என்னாகிறது என்பதை அவர்கள் நினைப்பதில்லை. நாளை இலங்கையில் தமிழரின் நிலை என்ன என்பதையும் நினைத்துப் பார்ப்பதில்லை.

அதற்குத் தேவை இந்திய ஆட்சியாளரைத் திருப்திப்படுத்தி அங்கு தமக்குத் தேவையான வதிவிட விசாவைப் பெறுவது மட்டுமே. இந்திய அரசுக்குத் தேவை இலங்கை அரசின் தயவைப் பெற்றுத் தனது வணிக நலன்களைப் பெறுவதும் பிராந்தியத்தில் தானே தலைவன் எனக் காட்டிக் கொள்வதுமே. மொத்தத்தில் இலங்கைத் தமிழரின் நலம் பற்றிய கரிசனை யாரிடமும் சுத்தமாக இல்லை.

ஆனால் சிங்களம் அடிச்ச காற்றைப் பயன்படுத்தி முள்ளி வாய்க்காலில் நன்றாகத் தூற்றிக் கொண்டதோடு தொடர்ந்தும் இந்தியாவும் த.தே.கூ. வீசும் சாமரக் காற்றில் தனது விளைச்சலை சுத்தமாக்கி வருகிறது. நிலப் பறிப்பால் தெருவுக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டில் அகதித் தஞ்சம் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம் என்ற ஆசையைத் தனது தரகர்கள் மூலம் ஏற்படுத்திக் கப்பலேற்றும் பணியைச் செய்கிறது.

அதிலும் பணம் தேடும் சிங்களவரில் நாமல் ராஜபக்ஷவின் கரங்கள் உள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. நிச்சயமாக இதில் கோத்தபாயாவின் பங்கும் இருக்கும். இது பற்றி த.தே.கூ.பேச்சாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன் வெளிப்படையாகவே செய்தியாளருக்கு அரசும் அதன் தரகர்களும் சம்பந்தப் பட்டிருப்பதாகக் கூறியும் உள்ளார். தமிழரின் நிலங்கள் சிங்களவரின் கைகளுக்கு அடிமாட்டு விலைக்கு மாறவும், கைமாறிய பணத்தை மீண்டும் சிங்களமே பயணக் கூலியாகப் பெறவும், தமிழரை நாட்டில் இருந்து விரட்டவும் த.தே.கூ.அரசியல் தலைமை நன்கு உதவுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

படகில் ஏற்றப்பட்ட மக்களோடு சிங்கள முஸ்லீம் மக்களும் காணப்படும்போது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஒளி பிறக்கிறது. சில படகுகள் அவுஸ்திரேலிய நாட்டைச் சேருகின்றன. அங்கே போன பின்னர் தமிழ் அகதிகளுக்கு நடக்கும் கதை கண்ணீராக மாறுகிறது.

பலர் விசாரணையின் பின்னர் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படுகின்றனர். திருப்பி அனுப்பப்பட்ட சிங்கள முஸ்லீம் அகதிகள் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்ப முடியும். ஆனால் தமிழ் அகதிகள் அறியப்படாத தடுப்பு முகாம்களில் சாகும் வரை நீதி விசாரணை அற்ற சிறைவாசம் பெறுகின்றனர்.

அவுஸ்திரேலியாவில் அகதித் தஞ்சம் பெற்ற ஒரு சிலராலும் அவுஸ்திரேலிய நாட்டுக்கு ஆபத்து என இரகசியத் தகவல் அங்குள்ள இலங்கைத் தூதரகமோ அல்லது அதன் முகவர்களோ அவுஸ்திரேலிய உள்ளகப் பாதுகாப்பு பிரிவுக்குத் தெரியப்படுத்துகிறது. அத்தகவல் சரியா இல்லையா என்ற கேள்விக்கோ அது யாரால் என்னவாகக் கொடுக்கப்பட்டு உள்ளது என்ற விபரமோ எவருக்கும் தெரியப்படுத்துவது இல்லை. அத்தகவலை வைத்தே தமிழ் அகதிகள் வயது பால் வேறுபாடு இல்லாது சிறப்புத் தடுப்பு முகாமுக்குள் சாகும் வரை வைக்கப் படுகின்றனர்.

இன்னும் பல அகதிப் படகுகள் திட்டமிட்டே கடலுக்குள் மூழ்கடிக்கப் பட்டதாக அவுஸ்திரேலிய கடற்படையே சந்தேகிக்கிறது. இந்தச் சந்தேகம் நியாமானது என்றே கருதவேண்டி உள்ளது. காரணம் இந்தப் பயணங்கள் சிங்களவரால் அவர்களுக்குச் சொந்தமான படகுகளில் மேற்கொள்ளப் படுகின்றன. பெரும்பாலும் அவை சிங்களப் பகுதிகளில் இருந்தே செல்கின்றன. தமிழனின் நிலமும் சொத்தும் பறித்தாயிற்று. வெளிநாட்டில் அவன் போயிருந்து சிங்கள அரசுக்குத் தலையிடியைக் கொடுக்கவா அவனை வாழ வைக்க வேண்டும்?

தமிழனை நாட்டில் இருக்க விட்டால் அவனது நிலத்தைப் பறிக்க முடியாது. அவ்வப்போது ஏதாவது ஆர்ப்பாட்டம் கூடச் செய்வான். வெள்ளை வான் கடத்தல் கொலை எத்தனை நாளைக்குச் செய்வது? எனவே பத்திரமாய் மொத்தமாய்ப் படகில் ஏற்றி கடலிலே மூழ்கடித்தால் விட்டது சனியன் என நிம்மதிப் பெருமூச்சும் விடலாம். நாடும் சிங்கள தேசம் ஆகிவிடும். நடக்குமா ? நடக்க விடுவோமா?



# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை

எல்லாருக்கும் வணக்கம் பாருங்கோ..., விடுமுறை எல்லாம் முடிஞ்சு எல்லாரும் திரும்பிவந்து, பழைய குருடி, கதவைத் திறவடி, எண்ட கணக்கில வேலைக்கு ஓட ஆரம்பிச்சிருப்பீங்கள், இனி பழையபடி தும்படிக்க வெளிக்கிட்டால் தான், இஞ்ச செலவுகளைக் கட்டுப்படுத்தலாம் எண்டுறது சொல்லியே தெரியவேணும்.

விடுமுறை எண்டது அவசியம் தான் பாருங்கோ. மனதுக்கு ஒரு அமைதி தேவைதானே. ஆனால் விடுமுறை எண்ட பெயர்ல, ஊருக்கு ஓடி, இராசபக்சவுக்கு உழைச்சுக் குடுத்துப்போட்டு வந்ததுமல்லாமல், இங்க வந்து இருக்கிற மற்றவனையும் குழப்புற கூட்டம் ஒண்டும் இருக்குது பாருங்கோ. என்னத்தைச் செய்யுறது... கலி காலம் குழி பறிக்குது எண்டு உதைத்தான் சொல்லுறவையாக்கும்.

விசயம் என்னெண்டால், போன கிழமை ஒரு தமிழ்க்கடைக்குப் போயிருந்தன். பெயருக்குத்தான் அது தமிழ்க்கடை. விக்குறது முழுக்க சிங்களச்சாமானுகள் பாருங்கோ. பிறகேன் அங்க போன நீ எண்டு என்னைக் கேட்கப்படாது. நான் அங்க வாங்குறது தென்னிந்தியத் திரைப்படம் மட்டும்தான். கடைக்குள்ள போன உடனே ஒரு மூலேக்க பெரிய சொற்பொழிவு நடக்குற சத்தம் கேட்டிச்சுது. விடுமே என்ர காது...? அப்படியே ஒரு மீற்றருக்கு நீண்டுட்டுது. அங்க பாத்தால், கிட்டடில சிறிலங்காவுக்குப் போட்டு வந்த ஒருத்தர் முழக்குறார், முழக்குறார், முழக்குறார் என்ர ஐயோ.., சிங்களவனே தன்ர நாட்டைப் பற்றி உப்பிடிக் கதையான் பாருங்கோ.. அந்த அளவுக்கு முழக்குறார். இராஜபக்ச ஏதாகிலும் கையுக்க வைச்சு அனுப்பினவரோ தெரியேல்லை. சிங்கம் சும்மா சாமி ஆடிச்சுது.

வெளிநாட்டு வீதியளே தோத்துப் போறளவுக்கு இராசபக்ச வீதிகள் அமைச்சிருக்கிறாராம். வாகனம் எல்லாம் சீறுதாம். ஐயோ கடவுளே... ஒவ்வொரு நாளும் அம்பது, அறுபது வாகனங்கள் குப்புற அடிச்சுப் பிரளுறதும், எக்கச்சக்கமான தெருநாயள் அடிபட்டுச் சாகிறதும் சிங்கத்துக்குத் தெரியாது போலகிடக்கு. சீனாவுக்கு இராசபக்ச சிறிலங்காவை வித்ததுக்கான பரிசு தான் உந்த மடார் ரோட்டுகள் எண்டுறதும் சிங்கத்துக்குத் தெரியாது. உதுதான் பரவாயில்லை எண்டு பார்த்தால், அடுத்ததா விட்டாரே ஒரு வாணம். என்ன தெரியுமே..? இப்ப ஊரில வீடுகள் வாங்குறதுக்கு எல்லாருக்கும் ஒரே போட்டியாம். தானும் அம்பது இலச்சத்துக்கு வீடு ஒண்டு பார்த்திருக்கிறாராம். அங்க வாங்கி விட்டால் மதிப்பு ஏறுமாம். நீங்களும் ஒண்டை வாங்கி விடலாமே என்று பக்கத்தில நிக்குறவருக்கும் ஐடியா குடுபடுது. இவ்வளவத்துக்கும் தான் இஞ்ச வேலைக்குப் போறேல்லை. வெளிநாட்டுக்கு வந்த காலம்தொட்டு, அரசாங்க உதவிலதான் வாழ்க்கை நடக்குது. உதுக்குள்ள மற்றவனுக்கு ஐடியா குடுபடுது. எடே மூதேவி... எங்கட சனம் வாயைக்கட்டி, வயித்தைக்கட்டி உழைக்குற எல்லாத்தையும் ஊரில கொண்டே கொட்டி, பிறகு சிங்களவன் அதைப் பறிச்சு, தன்ர ஆக்களுக் குக் குடுக்கப்போறான் எண்டது உனக்கு விளங்கேல்லையே..? நீ கொழுப்பெடுத்துக் கொண்டு திரியுறது பரவாயில்லை எண்டு, மற்றவருக்கும் உன்ர கொழுப்பில பங்கு குடுக்கிறியே..? சந்திரனில கொடி ஊண்டின ஆம்ஸ்ரோங் கூட உவ்வளவத்துக்கு அலட்டியிருக்கமாட்டார். அந்த அளவுக்கு சிறிலங்காவுக்குப் போட்டு வந்தது ஏதோ பெரிய சாதனை எண்ட கணக்குல பீத்திச்சுது சுளுக்காணம்.

பிறகேன்னண்டால் சனம் இப்ப அங்க ஒரே கோயில், குளம் எண்டுதான் திரியுதுகளாம். அதுகளுக்கு ஒரு கவலையும் இல்லையாம்.....!! ஓமடா ஓமப்பு... உன்னைமாதிரித்தானே உன்ர குடும்பமும் ஊர்ல திரியும். அது களுக்கு என்ன கவலையிருக்கப்போகுது.. வாயில நல்லா வருகுது கண்டியளோ..... உந்தப் போருக்குள்ள சிக்குண்டு, உறவுகளை இழந்து அனுதினம் அலையுற ஒருத்தரும் உன்ர கண்ணில படேல்லையே..? அனுதினமும் நடக்குற கடத்தல், கற்பழிப்பு எல்லாம் உன்ர காதில அடிபடேல்லையே...? இல்லாட்டிக்கு மூதேவிக்கு கண், காது எல்லாம் அரைகுறையோ தெரியேல்லை. உதுக்கும் மேலால, எத்தனை உறவுகளுக்கு ஊர்ல உதவி தேவைப்படுது எண்டு உனக்குத் தெரியுமே..? ஊருக்குப் போய் வந்த நீ, அஞ்சு சதமாவது அதுகளுக்கு ஈஞ்சிருப்பியே..?

உதொண்டையும் அறியாமல் இவனுகள் வெளிநாடுகளில பண்ணுற பிரச்சாரம், ஏதோ மகிந்தவின்ர பிரதிநிதிகளோ இவனுகள் எண்டுற அளவுக்குச் சந்தேகத்தை உண்டுபண்ணுது. இன்னொரு விதமான பிரச்சாரமும் எங்கட ஆக்கள் ஒருசிலரால் இப்ப நடக்குது. என்னெண்டால் ஸ்ரீலங்காவில உள்ள வங்கிகளில கொண்டுபோய் உங்கட பணத்தை வைப்புச் செய்தியள் எண்டால் உங்களுக்கு எக்கச்சக்கமான வட்டி கிடைக்கும் எண்டுறதுதான் அந்த வதந்தி பாருங்கோ. உள்ள காசெல்லாத்தையும் மகிந்த சுத்தினது பத்தாதெண்டு, வெளிநாட்டுத் தமிழரின்ரகாசையும்சுத்துறதுக்குமகிந்தகுடும்பம் திட்டம் போட்டிருக்குக் கண்டியளோ..! அதை நம்பி இஞ்ச மாரடிச்ச காசெல்லாத்தையும் இந்த விடுமுறைக்குப் போய் வந்த ஆக்கள் சிலர் அங்க வைப்புச் செய்துபோட்டு வந்திருக்கினமாம். எங்க எல்லாரும் ஒருக்கா அவைக்கு ஓ... போடுங்கோ பாப்பம். வட்டி இல்லை, கடைசில ஒரு சட்டி கூடக் கிடைக்கப் போறதில்லைப் பாருங்கோ...

ஊர்ல ஆமிக்காரன், ஒரு பக்கத்தால நில அபகரிப்புச் செய்துகொண்டு போறான். வெளிநாடுகளில உள்ள ஆக்களின்ர வீடு களையும், காணிகளையும் ஒரு அபகரிச்சு, இராணுவத்தின்ர குடும்பத்துக்குக் குடுக்குது மகிந்த. உந்த லட்சணத்தில, நீங்களும் இன்னும் வீடுகளையும் காணியளையும் வாங்கி அங்க உள்ள எங்கட உறவுகளைக் கொண்டு குவிச்ச சிங்களவனுக்கு அன்பளிப்பாக் குடுக்கப்போறியளே..? கொஞ்சம் யோசியுங்கோ பாப்பம்..., காசைச் சேர்த்து நீங்கள் வாழுற நாடுகளில உள்ள வங்கிகளில வைப்புச் செய்யுங்கோ.. ஒரு காலத்தில நல்ல ஒரு தீர்வு வரேக்க, அங்க உள்ள சொத்துக்களை வாங்கலாம். சில நேரம் நாங்களே எங்கட சொத்துக்களைத் திருப்பி வாங்க சிங்களவனுக்குக் காசு குடுக்க வேண்டியும் வரலாம். தமிழனை அழிக்கவே வேணும் எண்டு கங்கணம் கட்டிக்கொண்டு நிக்குற மகிந்தவுக்கு உதெல்லாம் பெரிய விசயம் இல்லைப் பாருங்கோ. ஏன் சிங்களவனைச் சொல்லுவான்.., யாழ்ப்பாணத்தில உள்ள சிறீதர் திரையரங்கை டக்ளசு பிடிச்சு வைச்சுக்கொண்டு, அதை இப்ப திருப்பிக் குடுக்க மாட்டன் எண்டு அடம் பிடிக்குதாம்.. பிறகெப்படி மகிந்த எங்கட சொத்துக்களைத் திருப்பித் தரப்போகுது..?

உதுகளை விட இன்னும் ஒரு அதிர்ச்சியான செய்தி என்னெண்டால் பாருங்கோ.., விடுமுறைக்கெண்டு எங்கட ஆக்கள் சிறிலங்காவுக்குப் போக, இஞ்ச உள்ள அவையின்ர வீடுகளில கொள்ளை நடக்குதாம். இதென்னடா பெரிய கண்றாவி எண்டு ஆராய்ஞ்சால், உதுகும் எங்கட ஒரு சில மாண்புமிகு தமிழரின்ர கைவரிசை தானாம். ஐயோ.. ,எங்கட ஆக்களுக் குச் சிங்களவனை விட இப்ப தமிழனால தான் பெரிய ஆக்கினை பாருங்கோ...! என்ன செய்ய..., விழிப்புத் தான் விடுதலைக்கு முதற்படி எண்டு சொல்லுறவை.., பாப்பம் எங்கட சனம் எப்ப விழிக்கப் போகுது எண்டு...!

வானம் உனக்கு பூமியும் உனக்கு
வரப்புகளோடு சண்டைகள் எதற்கு
வாழச் சொல்லுது இயற்கையடா
வாழ்வில் சொத்து செயற்கையடா..!!!

அப்ப வரட்டே....!

ஜேர்மனியில் தரம், உத்தரவாதத்துடன் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழர் ஸ்தாபனம்

SUN TVயின் நீண்ட கால விநியோகஸ்தர்

TJB BROTHERS

R. Ragunathan
Parkhofstr. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81

புதிய உதயம்
ஆசியா சமுத்திரம்
Sittard Str. 21
41061 Mönchengladbach
Tel: 02161 9028388 Fax: 02161 9028399


பாரிஸ் லாசப்பல் மாநகரில்
ஆடைத்தெரிவுகளின் அழகு மாடம்
தங்கம் ரெக்ஸ்
4, rue perdonnet
75010 Paris
France
மலிவான விலையில் மனம் மகிழ்ந்திடும்
தரமான தெரிவுகள்
அனைத்தும் தங்கத்தின்
பெறுமதி!
Tel: 01 40 36 00 35
Port: 06 23 54 65 14




# சாவகச்சேரி

சென்ற இதழ் தொடர்ச்சி...

*வண்ணை தெய்வம்*

மண்ணில் தினமும் கோடிக்கணக்கான மனிதர்கள் பிறந்துகொண்டே இருக்கின்றார்கள்! இவர்களில் மிகச் சிலரே பிற்காலத்தில் தங்களின் பெயர்களை மற்றவர்களும் தெரிந்துகொள்ளும்படியாக வாழ்க்கையில் தங்களை நிலை நிறுத்திக் கொள்கின்றார்கள். இப்படியாக வாழ்ந்தவர்களிலும் மிகச்சிலரே தாங்கள் இறந்த பிற்பாடும் தங்களது பெயர்களை மக்களின் மனங்களில் பதிய வைத்துவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் நினைக்கும்போது மழைத்துளி விழுந்த செம்மண் நிலம் போல எங்கள் மனங்களும் நெகிழ்கின்றது! அப்படியாக சாவகச்சேரியில் வாழ்ந்து மக்களின் மனங்களில் பதிந்துகொண்ட அந்த மண்ணின் மைந்தர்களை இனிப் பார்ப்போம்.

சாவகச்சேரியின் அரசியல் வரலாற்றில் தமக்கென தனியிடம் வகித்த தலைவர்கள் பலர் இருக்கின்றார்கள். 1948ல் இருந்து 1956வரை பாரளுமன்ற உறுப்பினராக அமரர் திரு.வி.குமாரசாமி அவர்கள் இருந்தார். இவர் பாரளமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அப்பொழுது ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் உதவி விவசாய மந்திரியாகவும் இருந்திருக்கின்றார். மகாவலி கங்கையை வடபகுதிக்குத் திசை திருப்பும் முயற்சியில் அதிக பங்காற்றி "விவசாய மன்னன்" என மக்களால் அன்பாக அழைக்கப்பட்டவர். (அரசியல் காரணங்களால் அத் திட்டம் நிறைவேறவில்லை) சாவகச்சேரி மகளீர் கல்லூரி, கைதடி வயோதிபர் நிலையம், சங்கத்தானை புகையிரத நிலையம் (இது 1984ல் உடைக்கப்பட்டு விட்டது) என பல மக்கள் தேவைகளில் பங்கெடுத்து மக்களால் மதிக்கப்பட்டவர்.

இலங்கை பாராளுமன்ற வரலாற்றிலேயே 28 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்தவர்கள் விரல் விட்டு எண்ணப்படக்கூடியவர்களே அப்படிப்பட்ட மிகச் சிலரில் அமரர் வ.ந.நவரத்தினம் அவர்களும் ஒருவர்! இவர்1956ல் இருந்து1985 வரை சாவகச்சேரித் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றார். இவரின் முயற்சியால் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி ஆயுள்வேத பல்கலைக் கழகம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் போன்றவற்றை உருவாக்கக் காரணமாக இருந்து மக்களால் 'கடமை வீரர்'' என போற்றப்பட்டார்.

இவருடைய இன்னும் பல வேலைத்திட்டங்கள் நாட்டின் பிரச்சனைகளால் முடிக்கப்படாமலேயே போய்விட்டதால் அவையெல்லாம் வெளிவராத உண்மைகள் ஆகிவிட்டன. தென்கிழக்கு ஆசியாவிலேயே வீட்டுக்கு வீடு சென்று ஆய்வு செய்யும் பணியினை யாழ் பல்கலைக் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி தொகுதியில் செய்வதற்கான ஏற்பாடுகளை அமரர் நவரத்தினம் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இதன் ஆலமாக சில வேலைத் திட்டங்களை ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளின் முதலீட்டுடன் செய்யக்கூடியதாக இருந்தன. இதற்கு உதாரணமாக Contrad Adenor Fondataion என்னும் ஜெர்மன் நாட்டின் உதவியிலான திட்டம். மற்றும் United Nation Development Program மூலமாக நன்நீர்த் திட்டம் என்று சிலவற்றை வரிசைப் படுத்த முடியும். ஆனால் யாழ்ப்பாணத்தில் அமெரிக்காவின் அலன் தம்பதிகள் கடத்தப்பட்டதின் மூலமாக இவ் வேலைத்திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டது!. இத்தகைய பாரிய திட்டங்களை 1978ம் ஆண்டு இவர் சர்வதேசப் பாராளுமன்றத்தின் உறுப்பினரானதன் மூலமாகவே இவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது.







சாவகச்சேரித் தொகுதிக்கு அணி சேர்த்தவர்களில் மற்றுமொருவர் திருவாளர் அ.பொ.செல்லையா அவர்கள். இவர் 1989ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றும் அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக பாராளுமன்றம் செல்லாமலேயே இருந்தவர். இவர் தமிழ் மேல் கொண்ட காதலால் 'முத்தமிழ் வித்தகர்'' ஆகியதுடன் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல்த் திருநாளை ஒவ்வொரு ஆண்டும் பெரு விழாவாக மாட்டு வண்டியில் ஊர்வலமாகச் சென்று பொங்கும் வழிமுறையை கடைப்பிடித்து வந்தவர்.

தமிழின் பெருமையை பலரும் அறியும் வண்ணம் சாவகச்சேரி நகரசபை முன்றலில் அய்யன் வள்ளுவன் அவர்களின் உருவச்சிலையை நிறுவி அச் சிலையை அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களால் திறந்து வைக்கச் செய்து தமிழ் மேல் பற்றுள்ள அனைத்து மக்கள் மனங்களிலும் இடம் பிடித்துக் கொண்டவர்.

இன்னும் சாவகச்சேரி மக்களால் மறக்கப்படாதவர்களாக இருப்பவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபையின் சாவகச்சேரிப் பிரதிநிதி "வள்ளல்" நவரத்தினம், சாவகச்சேரி நகரச பையின் விசேட ஆணையாளராக இருந்த நவரட்ணராசா, சாவகச்சேரி நகரபையின் நகர பிதாக்களாக இருந்த அமரர்கள் எஸ்.கே.திரவியநாயகம், ராமநாதன், சிவகுரு, அருணாசலம், சு.கனகரத்தினம் போன்றோர்கள் தங்களது சேவைகளினால் மக்கள் மனங்களில் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்தத் தலைவர்களைத் தவிர பல தமிழ் அறிஞர்களும், புகழ் பெற்ற கலைஞர்களும் இங்கு நினைவு கூரப்படவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் தமிழ் இலக்கியத் துறைக்கு பெரும் புகழ் சேர்த்த "பண்டிதமணி" அமரர் கணபதிப்பிள்ளை அவர்கள், இலங்கை வானொலியின் மூலமாக புழுகர் பொன்னையா என்னும் நாடகத்தை வானலைகளில் தவழவிட்ட "வரணியூரான்" என்ற அமரர் எஸ்.எஸ்.கணேசபிள்ளை அவர்கள்,கவிஞர்கள் வரிசையில் கவிஞர் முருகையா, கவிஞர் குமாரசாமி, கவிஞர் சின்னத்தம்பி போன்றவர்களுடன் நாதஸ்சுவரத்தில் புகழ் பெற்ற பஞ்சாபிகேசன், இசைத்துறையில் மன்றங்கள் அமைத்துப் பிள்ளைகளுக்கு பாடங் கற்பித்த ஆசிரியர்களான திரு.நடேசன், திரு.குமாரசாமி ஆகியோரும். அரசியல் கூட்டுறவு ரீதியாக ஆசிரியர் சி.வை.வைத்திலிங்கம், ஏ.கே.ராமலிங்கம், ஆன்மீக வள்ளல் இ.ராசதுரை, காந்தளகம் சச்சிதானந்தம் போனறவர்களும் சாவகச்சேரி மண்ணுக்கு பெருமை சேர்தவர்களாவார்கள்.

இவை மட்டுமல்ல சாவகச்சேரி மக்களுக்காக செயல்ப்பட்ட மன்றங்கள் சிலவும் இங்கு நினைவு கூரப்படவேண்டியவை! 1976ல் ஆரம்பிக்கப்பட்ட கைதடி சைவ அனாதைகள் இல்லம், சுவாமி சச்சிதானந்த ஆசிரமம், கைதடி இரட்சணிய சேவை, சாவகச்சேரி அறவழிப் போராட்டக்குழு, சாவகச்சேரி லயன்ஸ் கழகம், லியோ கழகம் போன்ற ஸ்தாபனங்களும் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளன.

அனாதைகள், வலுவிழந்தோர்கள், ஏழைகள், விதவைகள் எனபலதரப்பட்ட மக்களுக்கும் பலவருட காலமாக சேவையாற்றி வந்தது அறவழிப் போராட்டக்குழுவுடன். 1992ம் ஆண்டில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் மூலமாக நுணாவிலில் வலுவிழந்தோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. 1998ல்

லயன் கழகத் தலைவராக இருந்த அ.பொ. செல்லையா அவர்களின் செயலாற்றலால் சாவகச்சேரி லயன் கழகம் 23 கேடயங்களைப் பெற்று இலங்கையிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றது!. 2000மாம் ஆண்டிற்குரிய சர்வோதய விருது அப்பொழுது அறவழிப் போராட்டக்குழுவின் தலைவராக இருந்த எம்.கே.ஐகவதாஸ் அவர்களுக்கக் கிடைத்தது. இவையெல்லாம் சாவகச்சேரி மண்ணிற்கு பெருமை சேர்ப்பவையே!.

சாவகச்சேரியில் அடுக்குமாடிக் கட்டிடங்கள் அதிகமில்லை. ஆனாலும் சாவகச்சேரியை நினைவில் வைத்துக்கொள்ளும்படியாக இருக்கும் கட்டிடங்களில் 1978ம் ஆண்டளவில் கட்டப்பட்ட புதிய சந்தைக் கட்டிடம் இந்திய ராணுவத்தினரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானபோதும் இன்னமும் சாவகச்சேரிக்கு வருவோரை வரவேற்பதுபோல கம்பீரமாக நிற்கின்றது. இத்துடன்புகையிரத நிலையம், பொலிஸ் நிலையம், மருத்துவசாலை, கல்லூரிகள், வங்கிகள், கோவில்கள், நூலகம், படமாளிகைகள், என பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய அனைத்தும் சாவகச்சேரித் தொகுதிக்குள் இருக்கின்றன.

சாவகச்சேரி மக்கள் என்றும் பண்பாட்டால் மேன்மையானவர்கள் என்பதற்கு சில எடுத்து க்காட்டுக்கள் இருக்கின்றன போர்ச்சூழல் காலங்களான வடமராட்சி ஆனையிறவுத் தாக்குதல், யாழ் கோட்டைத் தாக்குதல் என்றும், 1995 ஐப்பசியில் நடைபெற்ற சூரியக்கதிர் ராணுவத் தாக்குதல் என்று வந்த போதும் வேறு ஊர்களில் இருந்து வந்த மக்களுக்கெல்லாம் ஆதரவாக இருந்தவர்கள் சாவகச்சேரி மக்கள்.

1983ல் நாடு தழுவிய இனக்கலவரம் நடைபெற்றபோது கைதடி ஆயுள்வேத பல்கலைக் கழகத்தை அகதிகள் முகாமாக்கி வந்தாரையெல்லாம் வரவேற்று ஈவு, இரக்கம் விருந்தோம்பலில் வரலாற்றில் தமக்கென முத்திரை பதித்தவர்கள். இவைகளையெல்லாம் நான் இங்கு பதிவாக்குவதற்காக பல தரவுகளை எனக்குத் தந்துதவிய எனது சாவகச்சேரி நண்பரொருவர் தனது பெயரை இணைக்கவேண்டாம் என ஒதுங்கி அடக்கத்தில் உயர்ந்தவராக நிற்கின்றார். இத்தகைய சிறப்புக் களுக்குரிய சாவகச்சேரி மண்ணையும், மக்களையும் பதியவைத்ததில் நானும் பெருமைப்படுகின்றேன்.


transfood

யேர்மனியில் 6 மொத்த மற்றும் சில்லறை வியாபார நிலையங்களைக் கொண்ட அங்காடி!




எமது கிளைகள்

Transfood
Acker str 30
40472 Dusseldorf
Tel: 0211 3677277
Fax: 0211 36118855
transfoodduesseldorf@yahoo.de

Transfood Cash & Carry
Friedrich ebert str 31a
51373 Leverkusan
02143 283559

Tropical Foods
Thieoboldsgasse 105
50676 Köln
0221 71904009
transfood48@yahoo.com

Tropical Foods
Hohe Str 26
47051 Duisburg
0203 73993308

Tropical Foods
Altendorfer str 266
45143 Essen
0201 94622375
0201 94622376

World Foods
Scheffel str 9
76135 Karlsruhe
0721 4530193
worldfood9@yahoo.de

தமிழ் மக்களின் பெருவிருப்புக்குரிய உணவுத் தயாரிப்பு நிறுவனங்களான
TRS - NIRU - DOUBLE HORSE - HEERA - TILDA
LAILA - MTR - SCHREZADE SURYA- KINGS - PG
RUBBICCON - PATTAKS - MAGGI - PRESIDENT
ஆகியனவற்றின் விநியோகஸ்தர்கள்.



# "ஈழம்" என்பது தமிழர்களின் தொன்மை!

ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் அதுவே மெய்யாகிவிடும் என்ற நம்பிக்கையில் பலரும் அதைச் சொல்லி வருகிறார்கள். இன்று சிங்களத்துக்கும் அதன் நட்பை நல்லெண்ணத்தை நாடும் எல்லோரும் ஈழம் என்ற சிந்தனையைத் தமிழர் மனதில் இருந்து அழித்துவிட வேண்டும் என்ற அவசரமும் அவசியமும் இருக்கிறது.

1880கள் முதல் அநகாரிக தர்மபாலா என்ற பெயர் மாற்றிக் கொண்ட டொன் கறோலிஸ் ஹேவவிதாரண என்ற சிங்களவர் முழு இலங்கையும் சிங்களப் பௌத்தருக்கே என்ற சிங்கள இனவெறி விசத்தை விதைத்து பெரு விருட்சமாக வளர்த்து விட்டார். அவரால் உருவாக்கப்பட்ட கனவு மகிந்த நடத்திய முள்ளிவாய்க்கால் போரினால் நனவாகிவிட்டது.

புலிகளின் ஆயுத பலம் உள்ளவரை தமிழீழம் பற்றி விமர்சிக்கத் தயங்கிய சிங்களம் இன்று அப்படி ஏதும் இருக்க முடியாது. இருப்பது ஒரே நாடு (ஸ்ரீலங்கா) ஒரே மக்கள் (பௌத்த சிங்கள மக்கள்) என அடித்துப் பேசத் தொடங்கிவிட்டது.

**போர் நடக்கும் வரை புலிப் பயங்கரவாத ஒழிப்பு என உலகைப் பேசவைத்து வெற்றி கண்டது சிங்களத்தின் ராஜதந்திரம். இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் எப்படியும் எவருக்கும் கட்டுப்படாத தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து விட்டால் இலங்கைக்குள் கால் பதித்து அதனைத் தமது இராணுவ வர்த்தக நலன்களுக்குப் பயன்படுத்த இயலும் என நம்பின.**

எனவே சிங்களம் நினைத்தபடி அனைவரும் போரில் பங்கேற்று இன்று தமிழ் இனப் படுகொலைக்கும் போர் குற்றங்களுக்கும் பதில் கூற வேண்டிய நிலையில் உள்ளனர். எவராவது சிங்களத்தை இக்குற்றங்களுக்கு விசாரணைக் கூண்டில் நிறுத்த முனைந்தால் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா உட்பட பல நாடுகள் கூடவே கூண்டில் நிறுத்தப்படும் நிலையை சிங்களம் ஏற்படுத்தும்.

அந்த அளவுக்கு அதற்கு சீனாவும் ரஷியாவும் துணை நிற்கும் என்பதை இந்த நாடுகளும் அறியும். எனவேதான் குறிப்பாக இந்தியாவின் நிலை பரிதாபமானது. அதன் பங்களிப்பு உலகறிந்த விடயம். விசாரணை என்று வந்தால் இந்தியா தப்ப முடியாதபடி சிக்கிக் கொள்ள நேரும். எனவேதான் இந்தியாவில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சி மத்திய அரசியல் கட்சியின் பேச்சாளர்கள் அனைவரும் ஈழம் என்று எதுவுமே இருந்தது இல்லை. அது பிரபாகரனின் சிறு பிள்ளைக் கனவு எனக் கூறிவருகின்றனர்.

இலங்கையில் ஈழக் குரல் முற்றாக இராணுவ அடக்குமுறைக்குள் மூழ்கிவிட்ட நிலையில் அங்கு மக்கள் ஈழத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் ஐ.நா.வுக்கு எதிரான ஆர்பாட்டங்களிலும் கட்டாயப்படுத்தி ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். எனவே இலங்கையில் தமிழரே விரும்பவில்லை என்ற இமாலயப் பொய்யையும் துணிந்து சொல்கின்றனர். ஆனால் தமிழகத்தில் 2011ல் நடந்த மாநில சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. காங்கிரஸ் கட்சிகள் படு தோல்வி அடைய ஈழப் போரின் முடிவே காரணமாக அமைந்தது.

அங்கேயும் புலம் பெயர் நாடுகளிலும்தான் ஈழம் பற்றிப் பேச முடிகிறது. எனவேதான் தமிழக ஊடகங்களில் செல்வாக்குக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் பொய் மேல் பொய்களைப் பேசி மக்களை மூளைச்சலவை செய்ய நினைக்கின்றனர்.

அமெரிக்க ஐரோப்பிய அரசும் இலங்கையில் கால் ஊன்றி சீனாவின் இந்து சமுத்திர ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தச் சிங்களத்தின் நட்பைப் பெற ஈழம் என்றோ? இன அழிப்பு என்றோ? போர்க் குற்ற விசாரணை என்றோ எவரும் பேசுவதைத் தடுக்கிறது.

ஆனால் வரலாற்று ரீதியாகச் **சங்க காலத்தில் இருந்தே ஈழம் என்ற நாடும் மக்களும் இலக்கியங்களில் பதிவாகி 2000 வருடங்களுக்கு முன்னே இருந்த காவிரிப்பூம்பட்டினம் என்ற கண்ணகி கோவலன் வாழ்ந்த பூம்புகார் கடல் துறைமுக நகரில் ஈழத்து உணவுப் பண்டங்களை ஏற்றிய கப்பல்கள் வந்து போயின என உள்ளது.** இதனையே கலைஞரும் மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டியதாகச் செய்திகள் உள்ளன.

இது போல் ஈழம் பற்றிய எதிர்ப்புக்கான இன்னும் பல காரணிகள் வரலாற்றில் உள்ளன. அவற்றை வேறொரு சமயத்தில் பார்க்கலாம்.








Orient
Textiles and Jewellery
2012 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்.
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.
உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36
165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958
சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.

# பல்துறைக் கலைஞனுக்கு பாராட்டுவிழா!




வாசகர்களுக்கு.

"மண்வாசனை" பகுதியில் அரியாலை பற்றி நாம் எழுதிய கட்டுரையில் அரியாலையில் வாழ்ந்த கலைஞர்கள் பற்றி எழுதுகையில் அம்மண்ணில் வாழ்ந்து மறைந்த உயர்ந்த கலைஞரான அமரர் பத்மா அவர்களைப்பற்றிய தகவல்களை குறிப்பிடாமல் விட்டுவிட்டோம்.

அமரர் பத்மா அவர்கள் ஒரு சிறந்த ஓவியர், சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை அண்டியுள்ள வர்த்தகஸ்தாபனங்களின் பெயர்ப் பலகைகளில் அனேகமானவை அமரர் பத்மா அவர்களின் கைவண்ணத்தால் உருவானவைகள்தான். அத்தோடு சிறந்த நாடகக் கலைஞர், இயக்குனர், இப்படியாக பல கலைத்திறன் கொண்ட படைப்பாளியாவார். இவரது இயக்கத்தில் உருவான "சபத சாணக்கியன்" என்னும் நாடகம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் மேடையேறியதாகும். இவர் இறந்த பின்னர் இவரது பெயரில் உருவாக்கப்பட்ட 'பத்மகலா நாடகமன்றம்சு இன்னமும் இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த தகவலை எமக்கு தந்துவிய "சப்தஸ்வரங்கள்" இசைக்குழுவின் இயக்குனர் திரு.நாதன் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

*வண்ணை தெய்வம்*



## பல்துறைக் கலைஞனுக்கு பாராட்டுவிழா.
## "நவரச நாயகன்" கே.பி.லோகதாஸ்.

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
பேசுவதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

என்னும் சொற்தேரின் சாரதி வேறு யாருமல்ல அது மகாகவி பாரதிதான்!. பாரதி கவிதையைப்பற்றியே அங்கு குறிப்பிட்டிருந்தாலும் இங்கு கலைஞர்களுக்கும் பொருத்தமாகின்றது. அந்த வகையில் வரும் ஒக்டோபர் மாதம் 'திருமறைக் கலா மன்றத்தின்" பிரான்ஸ் கிளையின் நடாத்தும் "கலைமாலை 2012"ல் கௌரவிக்கப்படவிருக்கும் நவரசநாயகன் கே.பி.லோகதாஸ் அவர்கள் இன்று நமது கௌரவத்துக்குரியவராகவும் இருக்கின்றார்.

ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதி அந்த நாட்டின் நாணயத்தை உயர்த்திக்காட்டுகின்றது! ஒரு கலைஞன் மேடைகளை, தொலைக்காட்சிகளை, சினிமாக்களை, எவ்வளவுதான் ஆட்சி செய்திருந்தாலும் அந்தக் கலைஞனுக்கு ஒரு பொது ஸ்தாபனத்தால் கௌரவம் வழங்கப்படும்போதுதான் அவன் கலைஞன் என்பதை இந்த சமூகம் ஏற்றுக்கொள்கின்றது என்பதை நாமும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்த வகையில் எங்கள் நவரசநாயகன் கே.பி.லோகதாஸ் அவர்களின் முப்பது வருடங்களுக்கு மேலான கலைப்பணியை அங்கீகரிக்கும் வகையில் திருமறைக்கலா மன்றம் இந்த கௌரவத்தை வழங்குகின்றது.

தாய் மண்ணில் பல பிரபல்யமான கலைஞர்களுடன் எல்லாம் நகைச்சுவை, குணசித்திரம் என பலதரப்பட்ட பாத்திரங்களில் நடித்து ஐரோப்பாவிலும் சுமார் முப்பது வருடங்களுக்கு

மேலாக மேடை வானொலி தொலைக்காட்சி என சகல துறைகளிலும் புகுந்து விளையாடிய கே.பி.லோகதாஸ் அவர்கள் 1993ம் ஆண்டு La Poudre. Aux Yeux என்னும் பிரெஞ்சுப்படத்திலும் நடித்து அசத்தியிருக்கின்றார் என்பது இவரைப்பற்றிய மேலதிகமான தகவல்

அத்தோடு இன்னொரு கொசுறுத் தகவல் 1995ம் ஆண்டில் “கதம்பம்” என்னும் பெயரில் ஒரு சிற்றிதழுக்கு ஆசிரியராகவும் இருந்திருக்கின்றார். இது சம்மந்தமான இன்னொரு கொசுறுத்தகவல் ஒரு இதழுடனேயே கதம்பம் நின்றுவிட்டது என்பது.

மேடையிலே இவர் நடிகனாகத் தோன்றினாலும்சரி, பட்டிமன்ற பேச்சாளனாக தோன்றினாலும்சரி, நிகழ்ச்சித் தொகுப்பாளனாகத் தோன்றினாலும்சரி தனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வேலையை கனகச்சிதமாகச் செய்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திவிடுவார்.

நாடகங்களில் இவர் நடிக்கும் பாத்திரத்திற்கான வசனங்களை ஒத்திகையில் ஒழுங்காகப்பேசி பின் மேடையில் இயக்குனரே சற்றும் எதிர்பாரதபடி தன்னுடைய சொந்த வசனங்களைப்பேசி தன்னுடன் சேர்ந்து நடிப்பவர்களை திணறடித்துவிடுவார்!

ஐரோப்பாவில் பல நூற்று மேடைகளைக் கண்டு விட்டார்! ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துவிட்டார் இருபதிற்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நாடகங்களில் நடித்திருக்கின்றார். வானொலி, மற்றும் தொலைக்காட்சி போன்றவற்றில் அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இப்படி இத்தியாதி, இத்தியாதியென கலைத்துறை ஊடகத்துறையென அனைத்திலும் புகுந்து விளையாடி பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை வசியப்படுத்தி வைத்திருக்கின்றார் இந்த லோகதாஸ்.

இவரின் எழுத்து இயக்கத்தில் உருவான “கிடுகுவேலிக் கீதங்கள்” என்னும் மேடை நாடகம், 'நீந்தத் தெரியாத மீன்கள்'' என்னும் தொலைக்காட்சி நாடகம் இவை இரண்டும் இன்றளவும் ரசிகர்களாலும், ஏனைய கலைஞர்களாலும் வியந்து பேசப்பட்டுக்கொண்டே இருக்கின்றது!.

இப்படியாக கலைத்துறையில் பல தடங்களில் பயணித்துவரும் எங்கள் நவரசநாயகன் கே.பி.லோகதாஸ் அவர்களுக்கு காலம் தேடிவந்து கொடுக்கும் கௌரவம்தான் திருமறைக் கலா மன்றம் வழங்கும் இந்த பாராட்டு விழா.

மீசைக் கவிஞன் பாரதியின் கவிதை வரிகளுக்கு ஒப்பாக வாழும்போதே கலைஞர்களை வாழ்த்திக்கொள்ளும் திருமறைக் கலா மன்றத்தினரோடு நவரசநாயகன் கே.பி.லோகதாஸ் அவர்களை வாழ்த்துவதில் அகரமும் இணைந்து கொள்கின்றது.





எங்கள் மலிவு விற்பனையில் நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் திருமணபட்டுப்புடவைகள், பட்டு வேஸ்டிகள், மற்றும் புத்தம் புதிய பஞ்சாபி வகைகள், சோளிஹிட் வகைகள், சீகுயின்ஸ் சாறிகள், புதிய RAJGURU (2012) சாறிகள் மற்றும் சிறுவர்களுக்கான கோட், சூட், சேட், சர்வாணி வகைகள் அனைத்தும் நீங்கள் இதுவரையில் எங்கும் பெற்றுயிருக்காத வகையில் மிகுந்த மலிவு விலையில் கொள்வனவு செய்ய ஒரே சந்தர்ப்பம் ஒரே இடம்... அது அபிரா டெக்ஸ்டைல்.

வேது ஆண்டில் அபிரா டெக்ஸ்டைல்

# PAGEVISION IT AG

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்.

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch
info@pagevision.ch



CHF 109.- inkl. MwSt.

எம் ஊடாக VOIP TELEFON இணைப்பை ஏற்படுத்தினால், இலவசமாகவும் மிகக் குறைந்த கட்டணத்திலும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**Tellstr. 31/ Ecke Militärstr. 106**
**8004 Zürich**

உலக ஓட்டத்திற்கு ஏற்ப உங்கள் வீடுகளிலும் நவீன கணனி முக்கியம் என்பதை நாம் அறிவோம்.



- Intel Core i5 2400
- 4x 3.10GHz, 6MB Cache
- 4GB DDR-3 Ram, Markenprodukt
- 1000GB Festplatte
- Nvidia GeForce GTX550 PCI-Express Grafikkarte mit 1GB DDR-5 Ram
- Windows 7 Home Premium

**CHF 1'190.- inkl. MwSt.**




return'IT

## günstige gebrauchte Computer Reparaturen aller Marken

## www.pckaufen.ch

**HP DC7700**

Intel Core 2 Duo E6300
2x 1.86GHz
1GB DDR-2 RAM
80GB Festplatte
DVD/CD-Brenner
Integrierte Intel Q965 Grafik
Anschlüsse: 8x USB 2.0
VGA, 5x Audio, GLAN, 2x PS/2
Windows XP Professional Lizenz

CHF 120.- inkl. MwSt.



**HP Compaq NC8430**

15.4" WSXGA+ Display
Intel Core 2 Duo T7200
2x 2.00 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
ATI Mobility Radeon X1600
120GB Festplatte SATA
54Mbit WLAN
Fingerprint Reader, Bluetooth
Akkulaufzeit: 46-60 Minuten
Windows XP Professionaler

CHF 270.- inkl. MwSt.



## !! REPARATUREN ALLER MARKEN !!

für Neuware besuchen Sie

## WWW.PAGEVISION.CH

**HP Compaq 8510W**

Intel Core 2 Duo T7500
2x 2.20 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
Nvidia Quadro FX 570M
250GB Festplatte SATA
300Mbit WLAN
Schweizer Tastatur, Fingerprint Reader, Bluetooth
*Windows VISTA Business Lizenz*

CHF 360.- inkl. MwSt.



Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50

## ◀◀ வரைவுச் சித்திரங்கள்

தொகுப்பு: திரு. ஆ. புலேந்திரன்
















ஈழவிடுதலைப் போராட்டத்தின் பதிவுகள்...

தொடர்–06

Ihr persönlicher Finanzoptimierer

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கண க்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
















சுவிசில் சொந்த வீடு வாங்க
விரும்பும் உறவுகளே, அவதானமாகச்
செயற்படுங்கள்.உங்கள் கடனுக்கான வட்டி
வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும்.
எனவே, சரியான வங்கியையும், வட்டி
வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.


உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும்
உங்களோடு கரங் கோர்க்கும்
ஒரேயொரு நிறுவனம் AWD.

## அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின்
முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு
ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம்
காப்புறுதி செய்து தருகிறோம்.

Allgemeiner Wirtschaftsdienst AG
Zweigniederlassung Bern-Köniz
Sägestrasse 79
3098 Köniz
**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**
eMail: krishnasamy.thileepan@awd.ch
Internet: www.awd.ch

# நீ தானே என் பொன்வசந்தம் இறுவட்டு வெளியீட்டில் சாதனை..!





இசைஞானி இளையராஜா, இயக்குனர் கௌதம்மேனன் இணைந்து பணியாற்றிய நீ தானே என் பொன்வசந்தம் திரைப்படத்தின் இறுவட்டு வெளியீடு கடந்தமாதத்தின் இறுதியில் சென்னையில் நடைபெற்றது. தயாரிப்பாளர் குமார் அவர்களின் வெளியீட்டில் திரைக்கு வரவிருக்கும் இப்படத்தின் இறுவட்டுக்கள், வெளியிடப்படுவதற்கு முன்பாகவே ஒரு இலட்சம் பிரதிகள் முற்பதிவு செய்யப்பட்டுவிட்டனவாம். வெற்றிக் கூட்டணியான கௌதம் - ஹரிஷ் கூட்டணி, கருத்து ஒவ்வாமை காரணமாக பிரிவைச் சந்தித்தது. அதன் பின் இளையராஜாவோடு கௌதம் இணைந்து பணியாற்றும் முதல் திரைப்படம் இதுவாகும். இப்படத்தின் வெற்றிக்கு இசைஞானியின் இசையும் ஒரு காரணமாக அமையும் என்பது தயாரிப்பாளர் குமாருக்கும், இயக்குனர் கௌதமிற்கும் நன்கு தெரியுமாம்.. இசைஞானி என்றால் இருக்காதா...?



# விஜய்யின் துப்பாக்கிச் சிக்கல்...!

தலைப்பின் உரிமை காரணமாக கடந்த பத்து மாதங்களிற்கு மேலாக வழக்கைச் சந்தித்து வரும் துப்பாக்கியின் தலைப்பை மாற்ற அல்லது, ஆரம்ப வடிவமைப்புக்களை மாற்ற முடிவெடுத்திருக்கிறது முருகதாஸ் - கலைப்புலி தாணு கூட்டணி. கடந்த ஒகஸ்ட் இருபது அன்று வெளியிடவேண்டிய திரைப்படத்தை எப்படி இனிமேலும் தள்ளிப்போடுவது என்ற தலைவலியில் இருக்கிறார் விஜய். இம்மாதம் 10 ம் திகதி வழக்குத் தவணையாக உள்ள நிலையில், இம்முறையாவது வழக்கை முடிவிற்குக் கொண்டுவருமாறு உத்தரவிட்டிருக்கிறார். அதற்குள் விரைவில் இறுவட்டு வெளியீட்டை நடாத்த வேண்டுமென்பது ஹரிஷ் ஜெயராஜின் விருப்பமாக இருக்கிறது. இதனால் ஒட்டுமொத்தத் தலைவலியில் இருக்கிறது துப்பாக்கி குழு. விஜய். விஜய்..... கவலைப்படாதீங்க...., இதுவும் தாண்டிப் போகும்.

தொகுப்பு: சரன்...



## அஜித்- ஆர்யாவின் அதிரடியில் ஜெயதேவ்

இரண்டாம் உலகம் திரைப்படத்தை முடித்துவிட்டு சென்னை திரும்பியிருக்கும் ஆர்யா உடனேயே அஜித்தை வைத்து விஷ்ணுவர்த்தன் இயக்கம் திரைப்படத்தின் நடிப்பில் இணைந்துவிட்டார். அஜித், ஆர்யா, டாப்சி, இணையும் இப்படத்தின் சுவாரசியமே அஜித்- ஆர்யாவின் படத்தில் இணையும் திருப்புமுனைக் காட்சி தானாம். இத்திரைப்படத்தின் விளம்பர வேலைகள் வெகுவிரைவில் முடிந்துவிடும் என்று கூறியிருக்கும் விஷ்ணுவர்த்தன், அஜித்-ஆர்யா இணையும் விளம்பர நிழற்படங்கள் வெகுஎதிர்பார்ப்பை உண்டாக்கும் என்கிறார். எதிர்பார்ப்பு எப்பவும் இருக்கும். கவுத்திராதீங்க சாமியோ..!



## "தல" யின் சுவாரசியங்கள்

அஜித் ஒரு சாய்பாபா பக்தர். தான் வாங்கும் வாகனங்களைக்கூட, முதலில் சாய்பாபாவின் ஆலயத்திற்கே எடுத்துச் செல்வாராம். யாரோடாவது தொலைபேசியில் பேச ஆரம்பிக்கும் போது இது உங்களுடன் பேச உகந்த நேரமா..? எனக் கேட்டுவிட்டே பேச ஆரம்பிப்பாராம். Car Racing இல் அஜித்தின் முன்மாதிரி பிரபல வீரர் அயேடன் சென்னா. அவர் ஒரு விபத்தின் இறந்தது அஜித்தின் பிறந்தநாள் அன்றுதானாம். தனது வாழ்வின் மிகவும் சோகமான நிகழ்வு இது என்று தனது ஒவ்வொரு பிறந்தநாள் தினத்தன்றும் அஜித் குறிப்பிடுவாராம்.


தனது குழந்தை அனோஸ்காவின் சுட்டித் தனங்களை சிறு சிறு ஒளிப்பதிவுக் காட்சிகளாகத் தனது செல்லிடப்பேசியில் சேமித்து வைத்திருக்கும் அஜித், தனது நடிப்பு இடைவேளையில் அவற்றைப் பார்த்து தன்னை ஆசு வாசப்படுத்திக்கொள்வாராம். திரைப்படங்களில் நடிப்பதற்கு முன், தான் கவனித்து வந்த ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை இப்போதும் மறக்காது கவனித்து வருகிறார். மாற்ற நடிகர்கள் போல, தனது புதிய படங்களின் விற்பனை நிலவரம் பற்றி ஒருபோதும் அஜித் அலட்டிக்கொள்வதில்லை. சந்தைக்கு வந்திருச்சு. சனங்க தீர்மானிக்கட்டும்.. என்பார். தல குணத்திலும் தல தான்.



## வரம் தந்த காமிக்கு..!

ஈழத் தமிழருக்கு வாராத மாமணியாய் வந்த முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதல்வர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் ஈழத் தமிழர் வரலாற்றில் அழிக்க முடியாத தடத்தைப் பதித்தவர். அவரும் அவரது ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமும் இந்திய அரசுக்கும் றோ உளவு நிறுவனத்துக்கும் விசுவாசமாக மாறி இயக்க மோதல்களுக்கு வித்திட்ட வரலாற்றைக் கொண்டவர்கள். இந்தியப் படையுடன் வெளியேறிய பின்னர் அவர் நிறைவேற்றிய தமிழ் ஈழப் பிரகடனம் பற்றி எதுவும் செய்ய முற்படாத காரணத்தால் தமிழ் ஈழம் இன்று தடை செய்யப்பட்ட சொல்லாக மாறிவிட்டது. இந்த நிலையில் அவரது மகத்தான மாகாண சபைத் தீர்மானமும் வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் போட அவரும் காரணமாக உள்ளார்.

இன்று அவரை இந்திய அரசு குப்பைக் கூடைக்குள் தள்ளிவிடும் நிலை ஏற்படுவதுபோல் தெரிகிறது. இனி அவரை இலங்கைக்கு அனுப்புவதில் எவருக்கும் தயக்கம் ஏற்படமுடியாத கால கட்டம். அந்த அளவுக்கு இந்திய இலங்கை அரசுகளின் நெருக்கம் காணப்படுகிறது. அதே நேரத்தில் வரதருக்கும் இந்திய அரசுக்கும் இடையே வெளி அதிகரிப்பது போல் தெரிகிறது.



## மகிந்தருக்கு ஆப்பு அடிக்க வருகிறார் சோபித தேரர் !

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தருக்குப் போட்டியாக வண. சோபித தேரர் நிறுத்தப்பட உள்ளதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. எதிர் கட்சிகளில் உள்ள குழுவினர் இந்தத் தேரரை நிறுத்த கொம்பு சீவும் வேலையில் இறங்கி உள்ளனராம். இந்த முயற்சிக்கு சரத் பொன்சேகாவும் வேறு பல முக்கிய தலைகளும் ஆதரவு தெரிவித்துள்ளனராம்.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது எப்படி நடக்குமோ அல்லது நடக்காமலே போய்விடுமோ என்ற நிலையில் நாடு இருக்கிறது. ஆனால் சிலருக்கு நினைப்பு தேரரின் பிழைப்பைக் கெடுத்துவிடுமோ என நினைக்கத் தோன்றுகிறது. நமக்கென்ன கோழியோ குரக்கனோ எமக்குச் சொந்தம் இல்லை. இந்த நிலையில் யாரால் யார் தலை உருண்டாலும் எமக்குக் கவலை கிடையாது. ஆனால் இப்படியான மன நிலை த.தே.கூ. கொண்டிருக்கிறதோ என்னமோ யாரறிவார்? ●

அண்மையில் புது டில்லி உயர் நீதிமன்றத்தில் வரதராஜப் பெருமாளின் பாதுகாப்புப் பிரிவில் உள்ளவர்களால் தமக்கு இடையூறு உள்ளதாகப் பிரதேச வாசிகளும் பொதுமக்களும் முறைப்பாடு செய்யும் மனுவை விகாஸ் படோறா என்ற வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார்.

சுமார் 20 முதல் 25 பாதுகாப்புப் பிரிவினர் பொது மக்கள் பாவிக்கும் புது டில்லி டி-பகுதியில் உள்ள சர்வோதயவின் பகுதியான பூங்காவில் சட்டங்களுக்கு மீறி ஆக்கிரமித்துப் பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படுத்துகிறார்கள். அங்கே கூடாரங்கள் மற்றும் வேறு கட்டமைப்புகளை அமைத்து குடியும் கும்மாளமும் இடுகின்றனர். எனவே அவர்களை அகற்ற நீதிமன்றம் ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கோரிக்கை மனு தாக்கலாகி உள்ளது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தலைமை பதில் நீதி அரசர் ஏ.கே. சிக்கிரி மற்றும் நீதிபதி ராஜீவ் ஸகாய் என்ட்லவ் அடங்கிய சபை மத்திய உள்துறை அமைச்சிடம் பதில் மனு கோரும் அறிவித்தலை விடுத்துள்ளது. இந்த வழக்கு வரதராஜப் பெருமாளின் சட்ட ரீதியான நாடு கடத்தலுக்கு வழி செய்யுமா? பார்க்கலாம் ●




## வடக்கின் ராஜாவாகும் சிங்களத்தின் கூஜா !

மாட்சிமை மிக்க வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்தசிறி சுகவீனம் காரணமாக ஓய்வு பெறத் தீர்மானித்து விட்டார் என்கிறது செய்தி. அவருக்கு ஏற்பட்ட நோய் என்ன என்பது தெரியவில்லை. ஆனாலும் தமிழரைப் பிடித்த நோய் புது உத்வேகம் கொண்டுவிட்டது போல் தெரிகிறது. அதன் விளைவாக இப்பொழுது வடக்கில் வாழ்ந்து வருபவரும் அங்கே தமிழ் மக்களுக்குப் பௌத்தமும் சிங்களமும் போதித்து சிங்களத்துக்குப் பாத பூசை செய்துவரும் யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் என்ற கூஜாவை வடமாகாண ஆளுநராக நியமிக்க சிங்களம் தீர்மானித்து விட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்தச் சோத்துப் பசையைப் பயன்படுத்தி பிரிந்துவிட்ட இரு இனங்களையும் ஒட்ட வைத்து ஒரே தேசம் ! ஒரே மக்கள்! என்ற மாய மானை செய்து விடலாம் எனச் சிங்களம் நம்புகிறது. இந்தக் கூஜா அண்மையில் ஜாதிக ஹெல உறுமய தலைவரும் மனித உரிமை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை யாழ்ப்பாணம் அழைத்து தமிழ் மாணவருக்குச் சிங்களத் தேசியப் பாடம் நடத்த வைத்துத் தேடிய புண்ணியத்தில் அவருக்கு இந்த இந்திரப் பதவி கொடுக்கப் படுவதாகப் பேசப்படுகிறது. மகிந்த ராஜாவுக்கு இந்தக் கூஜாவை விட்டால் வேறு கூஜா ஏது?

## அன்றும் யாழ்ப்பாணத்தில் நடந்தவைதான் இன்றும்!

அரசன் இல்லாத வேளையில், போர்த்துக்கீசரும் அவர்களின் வாலிபர்களும், மாலுமிகளும் மக்களின் பொருட்களை அபகரித்தும், அவர்களுடைய பசுக்களைக் கொன்றும் அந்த மாமிசத்தில் புதிய கறிகளை ஆக்கியும், மக்களுடைய வீடுகளுக்குள் நுழைந்து அவர்களின் மனைவிமார்களையும் புதல்விகளையும் மானபங்கப்படுத்தியும் குற்றச் செயல்கள் புரிந்தார்கள் என்பதனால் மக்கள் புரட்சி செய்தனர் என மக்கள் ஓலைச் சுவடிகளில் தமது அரசனுக்கு எழுதினார்கள். இச் செயல்களுக்காக அவர்கள் கண்டிக்கப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை.


ஆத்திரமடைந்த சைவமக்கள் பல போர்த்துக்கீச போர்வீரர்களைக் கொன்றனர். போர்த்துக்கீச பாதிரி டொம் ஜோர்ஜ் த ரெமுடோ (Dom Jorge de Temudo) என்பவரும் கொல்லப்பட்டார். நல்லூர்க் கோவிலை இடித்தவர்களையும் கொன்றனர். (ஆதாரம் கலாநிதி முருகர் குணசிங்கம் பக்கம் 183, இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

யாழ்ப்பாணத்தில் 1560ல் சங்கிலிய மன்னன் போர்த்துக்கீசரால் தோற்கடிக்கப்பட்ட போது நடந்தவைதான் 2009ல் பிரபாகரன் படை முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்டபின் இன்றுவரை சிங்களவரால் நடத்தப்பட்டு வருகின்றன.

அன்று அதிலிருந்து மீண்டு உலகம் வியந்து சிங்களத்துடன் சேர்ந்து எம்மை எதிர்த்துப் போராடி தோற்கடிக்கப்பட்ட தமிழினமாய் நாம் எழுந்தோம். ஆனால் இன்று தனித் தமிழ் ஈழம் சாத்தியமில்லை! ஈழத் தமிழனுக்கு இறையாண்மை கிடையாது! என எமக்கு மூளைச் சலவை செய்ய முனைகிறார்கள் சில ஆண்மையற்ற பேர்கள்.

தமிழர் தேசியம் பற்றிய பட்டறிவோ படிப்பறிவோ இல்லாத தமிழர் தேசியக் கூட்டமைப்பும் அதன் ஆதரவாளர்களும் எமது வரலாற்றுப் பாடத்தைப் படித்த பின்னர் எமக்கு மூளைச் சலவை செய்ய வரட்டும்.
சங்கிலி மாமன்னனுக்குச் சமனாக மாவீரன் பிரபாகரனும் அவனது படையும் உள்ளது என்பதை வரலாறு உணர்த்தும் பாடமாகவும் நாம் எடுத்துக் கொள்வோம்.

# அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் துரோகி இல்லையா? —அகரம் வாசகர்!


கேள்வி:- ஏன்? ஜீ.ஜீ. பொன்னம்பலம் பெயரை இடம்பிடவில்லை.

இலங்கை வாழ் இந்திய வம்சாவழி தமிழர்களின் (பத்து லட்சம்) மனதை புண்படுத்திவிட்டது உமது கட்டுரை

இதன் பதிலை உமது அகரம் அடுத்த கட்டுரையில் வெளியிடவும்.



(அகரம் சென்ற இதழில் த.எதிர்மன்னசிங்கத்தின் கட்டுரையில் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்த தமிழ் அரசியல்வாதிகளின் வரிசையில் ஜீ.ஜீ. அவர்களின் பெயர் ஏன் வரவில்லை என்பதற்கான விளக்கத்தைத் தருகிறார் கட்டுரையாளர். அதனை ஏற்பதும் விடுவதும் அவரவர் விருப்பம் சார்ந்த விடயமே)

— ஆசிரியர்

தமிழ் மக்களிடையே அழிநிலையில் இருந்த அரசியல் விழிப்புணர்ச்சி மீள எழுச்சியுறக் காரணமாக இருந்தவர் அமரர் ஜீ.ஜீ. இலங்கையர் என்ற பெருவட்டத்துள் தமிழரும் சிங்களவரும் சேர்ந்து பிரித்தானிய ஆட்சியில் சுதேச அரசியல் விழிப்புணர்ச்சி அவசியம் என்ற ஆளும் பிரித்தானிய அரசின் விருப்பத்தில் உருவான கட்சிதான் இலங்கைத் தேசியக் காங்கிரஸ். இது இந்தியாவில் காங்கிரஸ் கட்சியை உருவாக்கியது போன்றே இலங்கையிலும் சுதேசிகளின் விடுதலை வேட்கையை பிரித்தானியருக்கு எதிராகப் போய்விடாது செய்ய பிரித்தானிய ஆட்சியாளர் செய்த தந்திரம்.

இந்தியாவில் சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்களின் வன்முறை அரசியலுக்கு அணைபோடும் வகையில் காந்தியை ஒரு மாற்றுத் தலைவனாக்கியது வெள்ளையர் ஆட்சி. இன்று வரை அங்கே ஒரு மேல்தட்டு வர்க்கத்தின் கரங்களில் குறிப்பாக நேருவின் வழித் தோன்றல்களின் கரங்களில்தான் ஆட்சி அதிகாரம் கிடக்கிறது. என்ன ஜனநாயகம் காந்தியம் பேசினாலும் அங்கே காங்கிரஸின் ஆளும் குழுமம்தான் அதிகாரம் செலுத்தி வருகிறது.

இலங்கையிலும் இன்றுவரை இதே நிலையே ஏற்பட்டிருக்கும் அன்று அவர் தமிழ் காங்கிரஸ் கட்சி என்ற தனிக் கட்சியைத் தோற்றுவித்து அதன் மூலம் தந்தை செல்வாவை தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யாது விட்டிருந்தால். தெற்கிலே சிங்களவர் இலங்கையர் என்ற பேச்சை மாற்றிச் சிங்களமும் பௌத்தமும் எனத் தமது அரசியலை சிங்கள மயமாக்கிய பொழுது அதன் எதிர்வினையாக தமிழும் தமிழனும் பற்றிக் குரல் எழுப்பிய முதல் மனிதர் ஜீ.ஜீ.

இவர் துரோகியா எப்படித் துரோகி ஆனார் என்பதைப் பார்ப்போம். இலங்கையின் புதிய அரசமைப்புச் சட்டமான சோல்பரி அரசமைப்பு நகல் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதில் சிறுபான்மை மக்களுக்குப் போதிய பாதுகாப்பு உத்தரவாதம் தரப்பட வில்லை என்றும் சம வாய்ப்பு உரிமை வேண்டும் எனவும் போராடினார்.

சிங்களவரின் பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையில் ஏனைய சமூகங்களின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என 50க்கு 59வது என்ற தமது தேர்தல் கொள்கையை வலியுறுத்தி வந்தார். அன்றைய சட்ட சபையில் அவரது வாதங்கள் எடுபடாத நிலை கண்டு பிரித்தானியா சென்று அங்குள்ள பிரித்தானிய குடியேற்ற அதிகாரி வைற்ஹோலிடம் சோல்பரி அரசமைப்பு வரைவுக்கு எதிரான தமிழ் மக்களின் மனு என்ற 27 பக்க விண்ணப்பத்தையும் 1945ல் கையளித்துவிட்டு நாடு திரும்பி பதிலுக்காகக் காத்திருந்தார்.

அவர் பிரித்தானியாவில் இருந்த வேளை டி.எஸ். சேனநாயக்கா சோல்பரித் திட்டத்தை சபையில் சமர்ப்பித்து 3ல் 2பங்கு ஆதரவே தேவையான நிலையில் 90 வீதமான உறுப்பினரின் ஆதரவோடு நிறைவேற்றிவிட்டது. சிங்களவரான டபிள்யு. டி. தகநாயகாவையும் இந்தியத் தமிழர் பிரதிநிதியான ஐ. எக்ஸ். பெரேராவையும் தவிர அனைத்துத் தமிழ் உறுப்பினர்களும் ஆதரவு வழங்கி இருந்தனர்.

இதனால் அளவிலாத ஆத்திரம் கொண்ட ஜீ.ஜீ. 1947 தேர்தலில் 50க்கு 50 தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா மானம் உள்ள தமிழ்ச் சாதி என்ற தேர்தல் கொட்டொலிகள் மூலம் தமிழரைத் தட்டி எழுப்பித் தேர்தலில் பெரு வெற்றியும் பெற்றவரும் இவரே. முதன் முதலாகத் தேர்தல் களத்தில் தந்தை செல்வாவையும் கோப்பாய்க் கோமான் குமாரசுவாமி வன்னியசிங்கத்தையும் தமிழர் தேசிய அரசியலுக்குள் இழுத்து வந்து இறக்கி வெற்றி பெறவும் வைத்தவரும் இவரே.

இந்தத் தேர்தலில் வாக்களிப்புப் புள்ளி விவரங்களின் பிரகாரம் பெரும்பான்மை இனத் தின் விகிதாசாரம் சுமார் 68.32 என்கிறார் கலாநிதி முருகர் குணசிங்கம் தமது இலங்கையில் தமிழர் என்ற வரலாற்று நூல் பக்கம் 555-ல். தேர்தல் புள்ளி விபரம் இனப் பரம்பல் முறையாகக் இருக்க முடியாது என்றாலும் அதுவே சிங்களத் தின் எதிர்ப்புக்கு மேலும் வலுவூட்டும் என்பதால் தமது கொள்கையில் தொடர முடியாத கையறு நிலை அவருக்கு.

எனவே கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காங்கேசன்சமீகமந்து மற்றும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைகளைப் பெற்றுக் கொடுத்து வட பகுதி மக்களை ஆற்றுப்படுத்தினார் எனக் கொள்வதில் என்ன தவறு?

இவரைத் துரோகி எனச் சொன்னவரும் மற்றவர்களைச் சொல்ல வைத்தவரும் 1956 தேர்தல் மேடைகளில் எழுச்சி உரை ஆற்றி இளம் சிங்கமாகப் புறப்பட்ட திரு.அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமே. தமிழரின் அரசியல் மேடை களில் இந்த அசிங்கப் பட்டமளிப்பை அறிமுகப்படுத்திய அவருடைய அகராதியில் இவரை எதிர்க்கும் எவரும் தமிழினத் துரோகிகளே. ஆனால் இவரது அரசியலால் தமிழினம் அடைந்த நன்மை என்ன என்பதை வரலாற்றில் காட்ட முடியுமா?

ஆனால் ஜீ.ஜீ.யின் சந்ததி தொடர்ந்தும் தமிழரின் அரசியலில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு திகழ்கின்றன. திரு.குமார் பொன்னம்பலம் கொழும்பிலே பிறந்து கொழும்பிலே வாழ்ந்து கல்வி பயின்றவர். எம்.பி. ஆகித்தான் வாழ வேண்டும் என்ற நிலையும் அவருக்கு இருந்ததில்லை. இருந்தபோதும் சிங்கள இனமேலாதிக்க வெறிக்கு எதிராகக் கொழும்பில் இருந்தே செயற்பட்டவர்.

வெளிநாடுகளில் எல்லாம் சந்திரிகா சிங்கள இனத்தின் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தும் வகையில் வரலாற்றைத் திரிபுபடுத்தி சிங்களவரே இலங்கையில் தமிழருக்கு முன்னர் உருவான இனம் எனப் பிரச்சாரம் செய்து வந்தார். அவற்றுக்குச் சாட்டையடியாக வரலாற்று ஆதாரங்களோடு கொழும்பு ஆங்கிலத் தினசரிகளில் எழுதியதோடு முடிந்தால் பகிரங்க விவாதத்து வரலாம் எனச் சவால் விடுத்த வீரன். புலிகள் சார்பாக பேசும் அளவுக்கு மேதகு தலைவரால் மதிப்பளிக்கப் பட்டவர். அவருடைய அரசியல் தமிழரின் தன்மானம் சார்ந்ததாக விளங்கியதால் சிங்களப் பேரினவாத த்தால் படு கொலை செய்யப்பட்டார். அவரது கொலையை மாற்று இயக்கத்தினர் மாசுபடுத்தும் வகையில் காரணங்களைக் கற்பனை செய்து இழிவு செய்தனர். ஆனால் உண்மை வென்றது தலைவரால் மாமனிதர் என மதிப்பளிக்கப் பட்டார்.

மகன்தான் மாமனிதர் என்றால் மகன் வழிப் பேரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசியல் பேச வேண்டிய தேவை தமிழ் இனமானம் ஒன்றைத் தவிர வேறு என்ன இருக்கிறது? இப்படித் தொடர்ச்சியாகத் தமிழினத்துக்காக உண்டியல் குலுக்கி பணம் தேடாமல் இரண்டு தலைமுறையை அரசியல் வாரிசாக எமக்கு விட்டுச் சென்ற ஜீ.ஜீ. ஒரு துரோகி என்றால் நாம் எல்லாம் என்னவாக இருக்கிறோம் எனச் சுயமதிப்பீடு செய்ய வேண்டிய கட்டாயம் யாருக்குமே இல்லையா?




# Milin Impex

*Asiatische Lebensmittel Groß und Einzelhandel*

ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை
முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.



ஒவ்வொரு சனிக்கிழமையும்
இலங்கையிலிருந்து
வருவிக்கப்படும் உடன் மீன்கள்
குளிரூட்டப்பட்ட மீன்களையும்
மிககுறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்!

இந்த மலிவு விற்பனை
ஒவ்வொரு சனிக்கிழமையில் மட்டுமே!

**Tel: 0231 45 96 17 / 28**

அத்துடன் உங்கள் வசதிக்கு ஏற்ப நீங்கள் வீட்டில் இருந்தபடியே
எம்மிடம் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்!


**Geschäftszeiten:**
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 - 16:00 Uhr

**Dortmund** நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

**Wuppertal** நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869

**Lüdenscheid** நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid
Tel: 02351/9742131


MoneyGram International Money Transfer
P.S. Jewellers 100% Guarantee
P.S. Annachi Exclusive Textile Showroom
உங்கள் முல்லைம்
P.S. பவான் ' அண்ணாச்சி கடையில்
புதுப்புது உயர்தர ஆடை ரகங்கள்
தினம் தினம் அறிமுகம்!
உங்கள் வீட்டு அனைத்து மங்களகரமான நிகழ்வுகளுக்கும் 24 மணி நேரத்தில் வரும் அனைத்து பொருட்களும் உலகின் பல்வேறு இடங்களிலிருந்து ஆடை ஆபரண உலகில் ஆண்டாண்டு கால அனுபவமிக்க நம் அண்ணாச்சியின் கைத்தேர்வில் இறக்குமதி செய்யப்பட்டவை.
எங்கள் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களே! எண்ணற்ற டிசைன்களில்! ஏராளமான ஆடைகள் !! தினம் தினம் குவிந்த வண்ணம் உள்ளன.
அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த தமிழ் புதுவருட நல்வாழ்த்துக்கள்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்களகரமான வைபவங்களுக்கும் தேவையான அன்பளிப்பு பொருட்கள் 1 முதல் 1000 க்கும் மேல் எம்மிடம் கிடைக்கும்.
Premier
உங்கள் முல்லைம்
P.S. பவான்
அண்ணாச்சி
BANK
MoneyGram
International Money Transfer
பணம் மாற்று சேவை
24 நிமிடத்தில் உங்கள் தேவைகளை பெற்றுக்கொள்ளலாம்
இன்றைய தங்கத்தின் விலையை அறிய உடனே நாடுங்கள்
உங்கள் முல்லைம்
P.S. பவான்
அண்ணாச்சி கடை
• லண்டன்
• துபாய்
• சிங்கப்பூர்
• USA
Tel : 0208 4448958
H.P : 0172 2607388


24மணி நேர வானொலிச் சேவை
8வது
ஆண்டில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
ETR
European Tamil Radio
நிகழ்ச்சிகளுக்கான
தொலைபேசி இலக்கங்கள்:
Germany: 02381 97 25 560
Swiss: 044 508 7210
France: 01 70 90 10 44
England: 020 70 43 10 55
Ca, Toronto: 416 900 36 53
Ca, Montreal: 514 228 37 52
Int.: 0049 23 81 54 44 525
Hotbird 13° - Freq: 11.200 (V) - S/R: 27500 - Fec: 5/6
www.etr.fm - etr24.mobi
Tel.: 00 49 (0) 23 81 95 66 09 - Fax: 00 49 (0) 23 81 97 25 556 - eMail: info@etr.fm